பக்கங்கள்: 14

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 01 திங்கட்கிழமை 16.12.2024 கதிர் 039

## இது ரகசியம் அல்ல!

கண்ணாடிவீட்டுக்குள்இருந்தபடி கல்லெறியக்கூடாது என்பார்கள். ரெலோவின் தலைமையை மூன்று தசாப்தங்களுக்குப் பின்னரும் புதியவர்களுக்கு ☞2

## இந்தியாவில் பெருவரவேற்பு

# அமைச்சர்கள் ஜெய்சங்கர், நிர்மலா தேடிச்சென்று அனுரவுடன் சந்திப்பு

## பாதுகாப்பு ஆலோசகர் நோவாலும் பேச்சு







தனது முதல் வெளிநாட்டுப் பயணமாக இந்தியாவிற்குச் சென்றுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவுக்கு அங்கு பெரும் வரவேற்று அளிக்கப்பட்டுள்ளது. அவர் தங்கியிருக்கும் அதிசொகுசு விடுதிக்கே தேடிச் சென்று இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர், நிதி அமைச்சர் நிர்மலா, ☞2

## பதில் அமைச்சர்கள் 5 பேர் நியமனம்

ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க இந்தியா சென்றிருப்பதை அடுத்து அவர் வசம் இருந்த 5 அமைச்சுக்களுக்குப் பதில் அமைச்சர்கள் ☞2

## கடவுச்சீட்டு விவகாரம் தொடர்ந்து குழப்பத்தில்

கடவுச்சீட்டுக்களை வழங்குவது தொடர்பில் தொடர்ந்தும் குழப்பங்கள் நீடித்து வருவதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். தற்போது ☞2

## மேலும் 5 அமைச்சர்களினது கல்வித் தகுதி மீதும் சந்தேகம்

சபாநாயகரின் கல்வித் தகுதி மீது எழுப்பப்பட்ட சந்தேகத்தைத் தொடர்ந்து அவர் பதவி விலகிய நிலையில் மேலும் ஐந்து அமைச்சர்களின் கல்வித் தகுதிகள், அவர்களின்கலாநிதிபட்டங்கள்தொடர்பிலும் எதிர்க் கட்சிகள் சந்தேகங்களை எழுப்பத் தொடங்கியுள்ளன.

நகர அபிவிருத்தி, நிர்மாண மற்றும் வீடமைப்புஅமைச்சர்அநுரகருணாதிலக்க மற்றும் எரிசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி ஆகியோர் அவர்களில் ☞2

## எலிக் காய்ச்சல் காரணமாக மேலும் ஒருவர் உயிரிழப்பு

### சனிக்கிழமை மட்டும் 13 பேர் பாதிப்பு

எலிக் காய்ச்சல் காரணமாகப் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளார். அத்துடன் வடக்கில் இதுவரையில் 8 உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. சனிக்கிழமை மட்டும் இந்த நோயால் பாதிக்கப்பட்ட 13 பேர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சனிக்கிழமை இரவு பருத்தித்துறை, துன்னாலையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர்எலிக்காய்ச்சலால்உயிரிழந்தார். இதையடுத்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் காய்ச்சல் காரணமாக சேர்க்கப்பட்டுள்ள ☞2



## இந்தியாவிடமிருந்து இன்னும் பல உதவிகள் அநுரவிற்குக் கிடைக்கும்

### இந்திய துணைத் தூதுவர் தெரிவிப்பு

ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவின் பயணத்தின்போது இந்தியாவிடமிருந்து பல உதவித் திட்டங்கள் கிடைக்கவுள்ளன. வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான திட்டங்களும் அவற்றில் அடங்கும் என்று இந்திய உயர் ஆணையத்தின் யாழ்ப்பாணம் துணைத் தூதுவர் சாய் முரளி தெரிவித்தார்.

இலங்கைக்கான இந்திய உயர்ஆணையத்தின் பங்களிப்புடன் மிஸ்பா ஜெப மிஷனரி ஆலயத்தின் ஏற்பாட்டில் சனிக்கிழமை முல்லைத்தீவு முள்ளியவளையில் நத்தார் பெருவிழா இடம்பெற்றது. அதன் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கருத்து தெரிவித்ததாவது:

இந்திய மக்கள் சார்பாக மிஸ்பா ஜெப மிஷனரிஆலயமாணவர்களுக்குஉதவித் திட்டங்களை வழங்குவதில் பெருமையடைகிறேன்.

இந்திய அரசால் ஆரம்பிக் கப்பட்ட பல திட்டங்களால் குறிப்பாகவடக்கு,கிழக்குமாகா ணத்திலுள்ள மக்களுக்கு ஆதரவாக திட்டங்களால் இந்தப் பகுதி மக்கள் பயனடைந்துள்ளார்கள். மேலும்யாழ்ப்பாணபல்கலைக் கழகம், கிழக்கு பல்கலைக் கழகம் சம்பந்தமான திட்டங்களும் ☞8

## இந்த ஆளும்தரப்பு குறைந்த கடன்களையே பெற்றுள்ளது

ஜனாதிபதியாகஅநுரகுமார திசநாயக்க பதவியேற்ற பின்னர்தொடர்ந்தும்அதிகளவு கடன்கள் பெறப்படுகின்றன என்றுஎதிர்க்கட்சிகள்பரப்புரை செய்தாலும் ஆளும் தரப்பு இந்தக் காலப்பகுதிக்குள் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தகடன்களிலும்பார்க்கக் குறைந்தளவு கடன்களையே பெற்றுள்ளதுஎன்றுஉண்மை ஆய்வுநிறுவனம்ஒன்று ☞9

## கொலை செய்யப்பட்ட ஆண் பெண்ணாக மாறிய அதிசயம்

படுகொலை செய்யப்பட்ட ஆண் ஒருவர் பெண்ணாக மாறிய அதிசயம் குருநாகல மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

தும்மலசூரிய, சியம்பலகஸ்ருப்ப பிரதேசத்தில் டிசெம்பர் 12 இளைஞன் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார். உயிரிழந்தவர் 38 வயதானவர். அவரது சடலத்தை உடற்கூறாய்வுக்கு உட்படுத்துமாறு குளியாப்பிட்டிய நீதிவான் உத்தர விட்டார்.

உடற்கூறாய்வில்பொலிஸாருக்கு பேரதிர்ச்சி காத்திருந்தது. கொல்லப் பட்டவர் ஆண் அல்லர் பெண் என்று உடற்கூறாய்வு நிரூபித்தது. ஆனால் கொலைசெய்யப்பட்டவர்ஆண்என்று அயலவர்கள் திட்டவட்டமாகத் ☞2

## இறுதிக் கிரியைக்கு ஆயத்தமானபோது சடலத்தைக் கொண்டுசென்ற பொலிஸ்

### யாழ்ப்பாணத்தில் சம்பவம்

உயிரிழந்தவரின் இறுதிக் கிரியைகளுக்கான ஆயத்தங்கள் இடம்பெற்றுக்கொண்டிருந்தபோது திடீரென்று வந்த பொலிஸார் சவப் பெட்டியுடன் சடலத்தைத் தூக்கச்சென்று உடற்கூறாய்வுக்கு உட்படுத்திய சம்பவம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம்நகரப்பகுதியைச் சேர்ந்த செபமாலைமுத்து ☞2

### இந்தியா – இலங்கை இடையே

## ஜனவரியிலிருந்து மீண்டும் பயணிகள் கப்பல் சேவை

இலங்கையின் காங்கேசன்து றைக்கும் இந்தியாவின் நாகைப் பட்டனத்துக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை 2025 ஜனவரியில் மீண்டும் தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இனிமேல் இந்தியாவின் 'சுபம்' நிறுவனம் இந்தக் கப்பல் சேவையை நேரடியாகக் கையாளும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரையில் நடத்தப்பட்ட இந்தச் சேவையின் முதலீட்டாளர்களாக சுபம் இருந்தபோதும் இனிவரும் காலங்களில் அதுவே நேரடியாகக் கப்பல் சேவையை நடத்தும் என்று நிறுவனத் தலைவர் பொன்னுசாமி சுந்தர்ராஜ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் செய்தியாளர் களிடம் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் படகுசேவையை கடந்த மூன்று மாதகாலத்தில் முன்னெடுத்தபோது சிறுசிறு சறுக்கல்கள் காணப்பட்டுள்ளன. எனினும்அனைத்துத்தரப்பினரினதும் ஒத்துழைப்புடன் சிறப்பாக எமது சேவையை முன்னெடுத்தோம்.

ஜனவரியில்மீண்டும்படகுச்சேவை ஆரம்பிக்கப்படும்போது, சில வசதிகளை மேம்படுத்தவுள்ளோம். முக்கியமாக சுற்றுலாப்பயணிகளை அதிகரிக்கும் நோக்கத்தில் ☞2

### அதிக ஆசனங்களை பெற்றதால் மட்டும்

## தமிழ் அரசுக் கட்சி முடிவுகளுக்கு ஒத்துவரக் கேட்பது முறையற்றது

### சுமந்திரனுக்கு செல்வம் எம்.பி. பதில்

தமிழ்அரசுக்கட்சிகூடுதலான ஆசனங்களை பெற்றுவிட்டது என்பதற்காக அவர்கள் எடுக்கின்ற முடிவிற்கு ஏனையவர்கள் ஒத்துவரவேண்டும் என்று சொல்வது முறையற்ற செயல். தேர்தல் வெற்றிகளை வைத்து தமிழர்களின் அரசியல் தீர்வு விடயத்தை அணுக முடியாது என்று ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டனியின் வன்னி மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர்செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழ்அரசுக்கட்சியின்மத்திய குழுக் கூட்டம் வவுனியாவில் சனிக்கிழமைநடைபெற்றபின்னர், செய்தியாளர்களிடம் பேசிய கட்சியின் பேச்சாளர் சுமந்திரன், புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் தமிழ் அரசுக் கட்சியின் நிலைப்பாட்டை ☞9

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

விட்டுக்கொடுக்க முடியாது என்று விடாப்பிடியாக நிற்பவர்களின் காரணமாக கட்சிக்குள் குழப்பங்களும் பிளவுகளும் உருவாகியிருப்பது அறிந்ததே. கட்சி மீண்டும் ஒரு பிளவைச் சந்திப்பதற்கும் முக்கிய தலைகளின் வெளியேற்றத்திற்குத் தயாராகி வருவதும்கூ-ட வாசகர்கள் அறிந்ததே. இந்தக் குழப்பத்தின் காரணமாக ரெலோவின் உள்வீட்டு விவகாரங்கள் பலவும் சந்தி சிரிக்கும்போல் உள்ளது. அவற்றில் பல போர்க் குற்றங்களுக்காக ரெலோவின் தலைவர்களும் விசாரிக்கப்பட்டேயாகவேண்டும் என்கிற நிர்ப்பந்தத்தை எதிர்காலத்தில் ஏற்படுத்தும் போன்றே தெரிகின்றது.

நேற்று வெளிநாட்டில் இருந்து ஒரு அழைப்பு வந்தது. தெரியாத எண்ணில் இருந்து வந்த அந்த அழைப்பை எடுத்தவர் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டார். தனிப்பட்ட ரீதியில் அவரை நான் அறிந்திருக்கவில்லை. ஆனால் விடுதலைப் போராட்டக் காலத்தில் முக்கியமான ஒரு பேராளியாக இருந்திருப்பார் என்பது தொடக்க காலப் போராளிகளில் ஒருவர் என்பதும் அவரது உரையாடலில் இருந்து புரிந்தது. ஆழமாக ஆதாரபூர்வமாகப் பல விடயங்களையும் புட்டுப்புட்டு வைத்தார். அவை எல்லாவற்றையும் இங்கே எழுத முடியாது. அவற்றுக்கான ஆதாரங்கள் எனது கைகளில் கிடைக்கும்போது அவை பற்றி விலாவாரியாக எழுதுகின்றேன்.

ரெலோவின் தலைமையை மட்டுமல்ல தலைமைக் குழுவில் தற்போது கிளர்ச்சி செய்துவரும் உபதலைவர் ஹென்றி மகேந்திரன், பிரசன்னா, வினோ நோகராதலிங்கம் ஆகியோரை நோக்கியும் அவரது கருத்துக்களும் விமர்சனங்களும் காட்டமாக இருந்தன. கடந்த காலங்களில் ரெலோவுக்குள் நிகழ்ந்த பல தவறுகள் குறித்து இவர்கள் எல்லோரும் எதிர்க்கேள்வி கேட்காமல் இருந்தவர்கள்தானே என்று அவர் விமர்சித்தார். இவர்களுக்குத் தலைமையை எதிர்க்கும் திறனோ தலைமையைத் தூக்கி எறிந்துவிட்டுக் கட்சியைக் கைப்பற்றி சீர்ப்படுத்தும் திறனோ கிடையாது, அதற்கான துணிபற்றவர்கள் அவர்கள் ஏதாவது உருப்படியாகச் செய்வார்கள் என்று நீங்கள் நம்பியிருக்காதீர்கள் என்று என்னையும் எச்சரித்தார்.

சுமார் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக நீடித்த அவருடனான உரையாடல் எவ்வளவு பாரதூரமானதாக இருந்தது என்பதற்கான உதாரணமாகச் சில விடயங்களை மட்டும் வாசகர்களான உங்களோடு பகிர்ந்துகொள்ளலாம் என்று நினைக்கின்றேன்.

வடக்கு கிழக்கு இணைப்புக்கு ஆதரவாகக் கையெழுத்து வைக்காமல் ஒளித்தோடிய ஒருவர் முக்கிய நிர்வாகி, தான் வெளிநாடு செல்வதற்கு உதவினார் என்பதற்காக இயக்கத்தின் ஆயுதத்தை (அப்போது அது புதிய ரக நவீன பிஸ்ரல்) கொழும்பு அமைச்சர் ஒருவருக்குக் கொடுத்த நபர், இலங்கை அரசு 1990 முதல் 1995 வரை ரெலோவுக்கு துணைப்படை என்ற ரீதியில் மாதாமாதம் கொடுத்த லட்சக்கணக்கான ரூபாய் பணத்தை கிழக்கில் அப்போது செயற்பட்டுக்கொண்டிருந்த ரெலோ உறுப்பினர்களுக்கு ஆட்டையப் போட்ட ஒருவர், அந்தப் பணத்தில் தானும் குடும்பமுமாக சுகபோக வாழ்க்கையில் திளைத்த நபர், கழுதைப் பிரபு கரடி பாலு போன்ற கட்சி உறுப்பினர்களையே படுகொலை செய்த நபர், தனது சொந்தத் தம்பி இயக்கத்தின் பெயரால் செய்த கொலைகள், கொள்ளைகள், வன்புணர்வுகள், செட்டிபாளையம் முகாமில் வைத்து இருபுளொட் உறுப்பினர்களை அடித்துக்கொலைசெய்த, ஹென்றி மகேந்திரனின் மச்சானைக் கொலை செய்த, அன்னமலையில் 35 பேரைக் கொலை செய்த தனது சகோதரனைப் பாதுகாத்த ஒருவர், பிடிபட்ட விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களைக் கொலைசெய்துவிட்டு அவர்களில் ஒருவர் தனது சொந்தக்காரர் என்பதற்காக அவரை மட்டும் விடுவித்த ஒருவர் கட்சியின் உயர் நிர்வாகிகளில் ஒருவராக இருக்கின்றார். ஹென்றி மகேந்திரன், இந்திரகுமார் பிரசன்னா, வினோ நோகராதலிங்கம் எல்லோரும் அவருக்குக் கீழேதான் இவ்வளவு காலமும் தலைமைக்குழு உறுப்பினர்களாக இருந்தார்.

தமது தலைமை நிர்வாகி ஒருவரின் இத்தகைய அட்டூழியங்கள், கொலைகளை எதிர்த்துக் கேள்வி கேட்கமுடியாத, இவ்வளவு காலமும் அவர்களுக்கு ஆமாம் சாமி போட்ட இவர்களாக கட்சியை தூய்மைப்படுத்தி புத்துருவாக்கம் அடையச் செய்யப் போகிறார்கள்? என்றார் அவர்.

போர்க் குற்றங்களுக்கு நிகரான இந்த மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர் யார் என்பதையும் அவர் தெளிவாக, திகதி வாரியாக, சம்பவங்கள் செய்நேர்த்தி வாரியாக எ-டுத்துக் கூறினார். ஒரு பயங்கர திகில் அனுபவத்தை ஏற்படுத்தும் 'ஹெரர் மூவி' கதை போன்று கேட்டுக்கொண்டிருந்த எனக்கு அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சியளிக்கக்கூடிய வகையில் அவர் ஒவ்வொன்றாக அடுக்கிக்கொண்டே சென்றார். எல்லாவற்றையும் விவரித்தால் இன்றும்கூட எனது உயிருக்கு உத்தரவாதம் இருக்குமோ தெரியாது.

அவர் கூறிய பலவற்றுக்கு எங்கெங்கெல்லாம் ஆதாரங்கள் இருக்கின்றன. யார் யாரெல்லாம் சாட்சிகளாக இருக்கின்றனர் என்கிற விவரங்களையும் அவர் எனக்கு தெரியப்படுத்தினார். தன்னிடம் இருக்கும் ஆதாரங்களையும் அனுப்பி வைப்பதாகத் தெரிவித்திருக்கின்றார். ஆதாரங்களும் சாட்சியங்களும் கிடைத்ததும் ஒவ்வொன்றாக அவை பற்றி விளக்குவேன்.

அதுவரையில் ரெலோவின் தலைமை மாற்றம் வெகு விரைவில் நிகழவேண்டும் என்பது எனது விருப்பம். இல்லாவிட்டால். உட்கட்சிக்குள் நிகழ்ந்தவற்றுக்கும் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடூரங்களுக்கும் பல பயங்கரங்களுக்கும் நானும் ஒரு கேள்விச் சாட்சியாகிவி-டுவேனே என்கிற பயம் என்னை வாட்டத் தொடங்கியிருக்கிறது. கண்ணாடிக் கூட்டுக்குள் இருந்து கல்லெறியக்கூடாது என்பதை ரெலோ தலைவர்கள் மறந்ததன் விளைவு இது என்று நினைக்கின்றேன். அதற்குச் சாட்சியாக நான் மாறிக்கொண்டிருக்கின்றேன் என்பதுதான் காலக்கொடுமை.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## அமைச்சர்கள் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவால் ஆகியோர் நேற்றிரவு சந்தித்துப் பேசினர். இன்று பிரதமர் நரேந்திர மோடி மற்றும் ஜனாதிபதி முர்மு ஆகியோரை ஜனாதிபதி அநுரகுமார சந்திக்கவுள்ளார்.

இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்முவின் அழைப்பின் பேரில் இடம்பெறும் இலங்கை ஜனாதிபதியின் இந்தப் பயணம் இரு நாடுகளுக்கும் இடையேயான உறவுகளை மேலும் வலுப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியா - இலங்கை பொருளாதார ஒத்துழைப்புக்களை பலப்படுத்திக்கொள்ளல் மற்றும் இரு நாடுகளுக்கும் இடையி லான முதலீட்டு வாய்ப்புக்களை விரிவுபடுத்திக்கொள்வது தொடர்பில் இந்திய நிதி அமைச்சர் நிர்மலாவுக்கும் ஜனாதிபதி அநுரகுமாரவுக்கும் இடையிலான சந்திப்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது.

அதேநேரம் இந்திய சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அதிகளவில் அழைத்து வருவது மற்றும் இலங்கையின் விவசாய நவீனமயமாக்கல், டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

இலங்கையுடனான நட்புறவை என்றும் பேணுவோம் என்றும் அநுரகுமாரவிடம் நிர்மலா உறுதியளித்துள்ளார்.

இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கருக்கும் ஜனாதிபதி அநுரகுமாரவுக்கும் இடையிலான சந்திப்பு சிநேகபூர்வமான முறையில் இடம்பெற்றது.

இலங்கையின் பொருளாதார மறுமலர்ச்சிக்கு இந்தியாவின் மிகப்பெரிய சந்தையை பயன்படுத்திக்கொள்வது குறித்து இந்தப் பேச்சில் கவனம் செலுத்தப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது.

இலங்கையின் சுற்றுலா, முதலீடு மற்றும் வலுசக்தி துறைகளில் இரு தரப்பு ஒத்துழைப்புக்கும் கலாநிதி ஜெய்சங்கர் இந்தச் சந்திப்பில் இணக்கம் தெரிவித்தார்.

மீன்பிடித்துறை மற்றும் தேசிய ஒற்றுமை மேம்பாடு உள்ளிட்ட இரு நாடுகளுக்கும் நெருக்கமான தொடர்புள்ள விடயங்கள் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

'ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவின் முதல் இந்தியப் பயணத்தின் தொடக்கத்தில் அவரை வரவேற்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்தியாவின் ''அண்டை நாடுகளுக்கு முதலில்" கொள்கை மற்றும் சாகர் வெளிப்பாடு (றீபுறாபுயூநுற்மியிலிலிவ்) ஆகிய இரண்டிற்கும் இலங்கை முக்கியமானது. பிரதமர் நரேந்திர மோடியுடனான பேச்சுக்கள் அதிக நம்பிக்கை மற்றும் ஆழமான ஒத்துழைப்பிற்கு வழிவகுக்கும்,' என்று ஜனாதிபதியைச் சந்தித்த பின்னர் ஜெய்சங்கர் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் ஸ்ரீ அஜித் தோவாலுடனான சந்திப்பில் இந்து சமுத்திர பிராந்திய வலயத்தின் பாதுகாப்புத் தொடர்பில் அதிக கவசம் செலுத்தப்பட்டுள்ளது.

முன்னதாக, ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க நேற்று மாலை 5.30 மணியளவில் புதுடில்லி இந்திராகாந்தி விமான நிலையத்தை சென்றடைந்தார்.

இந்திய தகவல் தொழில்நுட்ப அமைச்சர் கலாநிதி முருகன், இலங்கைக்கான இந்திய உயர் ஆணையர் சந்தோஷ்ஜா, இந்து சமுத்திர வலயத்தின் மேலதிகச் செயலாளர் புனித் அகர்வால், இந்திய உபசரணைப் பிரதானி அன்ஜமன் கவூர் உள்ளிட்ட குழுவினர் ஜனாதிபதிக்கு விமான நிலையத்தில் சிறப்பு வரவேற்பளித்தனர்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் இந்தியப் பயணம் தொடர்பில் இந்திய ஊடகங்கள் சிறப்பாக வரவேற்புக் கொடுத்திருந்ததுடன், புதுடில்லி நகரின் பிரதான சுற்றுவட்டாரத்தில் ஜனாதிபதி மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் புகைப் படங்கள் அடங்கிய பதாகைகளும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன என ஜனாதிபதி ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கை அயலுறவுத்துறை வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ உள்ளிட்டோரும் இந்தச் சந்திப்புக்களில் கலந்துகொண்டனர்.

## கடவுச்சீட்டு ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பில் உள்ள கடவுச் சீட்டுக்கள் அடுத்த வருடம் ஜுலை மாதம் வரைக்குமே போதுமானவை என்றும் அதன் பின்னர் புதிய கடவுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் நிச்சயமற்ற நிலையிலேயே இருக்கின்றனர் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடவுச்சீட்டு விவகாரம் ஒரு 'உண்மையான குழப்பமாக' மாறியுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால ஒப்புக்கொண்டுள்ளார், புதிய கடவுச் சீட்டுக்களுக்கான கேள்வி அறிவிப்புக்களை விடுப்பதுகூட சிக்கலாகியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இலத்திரனியல் சிப் கொண்ட 750,000 கடவுச்சீட்டுகளைப் பெறுவதற்கு கேள்வி கோரப்பட்டதன் விளைவாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு நடந்து வருவதால் அதே விநியோகஸ்தரிடமிருந்து அதிக கடவுச்சீட்டுகளைப் பெற முடியுமா என்பதும் சிக்கலாகவே உள்ளது என்று அமைச்சர் விளக்கினார்.

கடந்த சில வாரங்களாக பல கூட்டங்கள் நடைபெற்றதாகவும், சில கூட்டங்கள் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நடைபெற்றதாகவும் பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார். இந்த பிரச்சினையை ஆளும்தரப்பு அவசரமாக கவனிக்கவேண்டிய விடயமாக கருதுவதாகவும் அமைச்சர் கூறினார்.

## இறுதிக் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாகேஸ்வரி (வயது-77) என்ற பெண்மணியின் இறப்புத் தொடர்பிலேயே இந்தக் குழப்பம் நேற்று இடம்பெற்றது. யாழ். போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட உடற்கூறாய்வில் மாரடைப்புக் காரணமாகவே அவர் உயிரிழந்தார் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

நாகேஸ்வரியின் இறப்புத் தொடர்பில் சந்தேகமிருப்பதாக அவரது சகோதரன் யாழ்ப்பாணப் பொலிஸாருக்குச் செய்த முறைப்பாட்டை அடுத்தே, அவரது சடலம் இறுதிக் கிரியைகளுக்குச் சற்று முன்பாக உடற்கூறாய்வுகளுக்காக எடுத்துச் செல்லப்பட்டது.

யாழ்.போதனா வைத்தியசாலை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி திருமதி அன்ரலா வின்சன்தயான் இறப்புத் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டார்.

உயிரிழந்தவரின் உடலில் படுக்கைபுண்கள் காணப்பட்ட நிலையில் உடற்கூறாய்வுக்கு உத்தரவிட்டார். பரிசோதனையில் எந்தவித சந்தேகமும் இல்லாமல் மாரடைப்பால் நிகழ்ந்த இறப்பு என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து சடலம் மீண்டும் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

## பதில் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியமிக்கப்பட்டுள்ளனர் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை பதில் அமைச்சராக, பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திராவும், டிஜிட்டல் பொருளாதார பதில் அமைச்சராக, பிரதி அமைச்சர் எரங்க வீரரத்னவும், பாதுகாப்பு பதில் அமைச்சராகப் பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் நிதி மற்றும் திட்டமிடல், பொருளாதார அபிவிருத்தி பதில் அமைச்சராக, பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெருமவும், பதில் தொழில் அமைச்சராக, பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்கவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

## மேலும் 5....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருவர். அநுர கருணாதிலக்கவின் கல்வித் தகுதி மற்றும் குமார ஜயக்கொடியின் பொறியியல் பட்டம் ஆகியன தொடர்பில் கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன.

இவர்களின் கல்வித் தகுதி தொடர்பில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல்களைப் பெறுவதற்கான முயற்சிகள் சில அரசியல் கட்சிகள் ஈடுபட்-டுள்ளன.

இதற்கிடையே தேசிய மக்கள் கட்சியின் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமது முகப்புத்தகக் கணக்கில் பதிவிட்டிருந்த கல்வித் தகுதிகளில் சிலவற்றைத் திடீரென நீக்கியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. சபாநாயகரின் பதவி விலகல் சர்ச்சையை அடுத்தே அவர்கள் இப்படிச் செய்துள்ளனர்.

முகநூல் கணக்குகளின் கடந்த காலப் பதிவுப் பகுதியைச் சரிபார்க்கும்போது, சில நாட்களுக்கு முன்னர் விடயங்கள் நீக்கப்பட்டுள்ளன என்பது தெளிவாகத் தெரிகிறது என்று எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

பொதுத் தேர்தல் பரப்புரைப் பதாகைகள் மற்றும் சுவரொட்டிகளில் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கல்வித் தகுதிகளை தெளிவாகக் குறிப்பிட்டுள்ளதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன.

## கொலை....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கின்றனர். நீண்ட காலமாக அவர் ஆண் போன்று வேடமிட்டிருந்திருக்கலாம் என்று பொலிஸார் இப்போது சந்தேகிக்கின்றனர்.

கொல்லப்பட்டவர்கள் சியம்பலகஸ்ருப்ப பிரதேசத்தில் உள்ள பெரிய தோட்டமொன்றில் வசித்து வந்தார். கைவிடப்பட்ட நாய்களைப் பராமரிப்பதில் ஆர்வம் கொண்டிருந்தார். அவர் கொலை செய்யப்பட்டபோது 60க்கும் மேற்பட்ட நாய்களை அவர் கவனித்து வந்துள்ளார்.

அவர் கொல்லப்பட்டதற்கான காரணத்தைப் பொலிஸார் இதுவரையில் கண்டுபிடிக்கவில்லை. அயலவர்கள் வழங்கிய தகவலின்படி பொலிஸார் கொலையுண்டவரின் சடலத்தை மீட்டு விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

## ஜனவரி ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயணக்கட்டணங்களை மாற்றியமைத்துள்ளோம்.

தற்போது இருவழிக் கட்டணமாக 9,700 இந்திய ரூபாய் அறவிடப்படுகின்றது. அதனை நாம் 8500 இந்திய ரூபாயாக மாற்றியமைப்பதோடு பத்து கிலோகிராம் எடையுடைய பொதியையும் இலவசமாகக் கொண்டுவர அனுமதிக்கப்போகிறோம்.

அதிக எடையுடைய பொதிகளைக் கொண்டுசெல்வதாக இருந்தால் மேலதிக கட்டணம் செலுத்தவேண்டியிருக்கும். அதற்கான தொகைகள் எமது உத்தியோகபூர்வமான இணைதளத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. பயணப்பொதிகளுக்கான முற்பதிவுகளை இணையத்தின் ஊடாக மட்டுமே மேற்கொள்ள முடியும்

அதேநேரம், நாகைப்பட்டினத்தில் இருந்து பயணத்தை ஆரம்பிக்கும் பயணிகள் அதிகாலையிலேயே வருகை தருவதாலும், அதேபோன்று காங்கேசன்துறையில் இருந்து

தொடர்ச்சி 8ம் பக்கம்....

## விவசாய நிலங்கள் நீரில் கற்பிட்டியில் பரிதவிப்பு

(சியாஜ்)

புத்தளம் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள சீரற்ற வானிலையால் மக்களின் இயல்பு வாழ்க்கை தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுள்ளதுடன்தாழ் நிலப் பிரசேங்களில் வெள்ள நீர் நிறைந்து காணப்படுவதுடன் கற்பிட்டி பிரதேச மரக்கறிச் செய்கைளும் முழுமையாக



பாதிக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் புத்தளம் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக 7740 குடும்பங்களைச்சேர்ந்த 28014 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் புத்தளம் மாவட்ட இடர்முகாமைத்துவநிலையம் தெரிவித்துள்ளது.

புத்தளம், முந்தல், கற்பிட்டி, ஆராச்சிக்கட்டுவ, பள்ளம, நாத்தாண்டி, மாதம்பை, வண்ணாத்திவில்லு, தங்கொட்டுவ மற்றும் வெண்னப்புவ ஆகிய 10 பிரதேச செயலாளர்



பிரிவுக்குட்பட்ட 170 கிராம சேவகர்கள் பிரிவுகளைச் சேர்ந்த மக்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் கற்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 11 கிராம சேவகர் பிரிவுகளில் 841 குடும்பங்களைச் சேர்ந்த 2823 பேர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் பாலக்குடா கமநல சேவைகள் நிலையத்திற்குட்பட்ட நுரைச்சோலை, பூலாச்சேனை, மாம்புரி, நரக்கள்ளி, நாவற்காடு, பனையடி, ஏத்தாளை, முசல்பிட்டி, ஆலங்குடா உள்ளிட்ட பல கிராமங்களில் செய்கை செய்யப்பட்டுள்ள ஆயிரத்திற்கு மேற்பட்ட மரக்கறிச் செய்கைகள் முழுமையாக பாதிக்கப் பட்டுள்ளன என விவசாயிகள்







### வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள

# பொருளாதாரம் மத்திய நிலையத்தை திறக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

## விவசாயிகள் கோரிக்கை

வவுனியா பொருளாதார மத்திய நிலையம் கடந்த ஆறு ஆண்டுகளுக்கு மேலாக புதிதாக அமைக்கப்பட்டு திறக்கப்படாத நிலையில் காணப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் குறித்த பொருளாதார மத்திய நிலையத்தை பகிரங்க கேள்வி கோரல் மூலமாக வழங்கி அதனை செயற்படுத்த வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

குறிப்பாக 295 மில்லியன் ரூபா செலவில் அப்போதைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாக அமைக்கப்பட்ட குறித்த பொருளாதார மத்திய நிலையம் வவுனியா மாவட்ட விவசாயிகளுக்கு நன்மை பயக்கும் வகையிலும் அமைக்கப்பட்டிருந்தது.

ஓமந்தையில் அமைப்பதா? தாண்டிக்குளத்தில் அமைப்பதா? என்று அரசியல்வாதிகளின் பல்வேறு இழுபறிகளுக்கு மத்தியில் மூன்றுமுறிப்பு பகுதியில் அமைக்கப்பட்ட குறித்த பொருளாதார மத்திய நிலையமானது இதுவரை திறக்கப்படாத நிலையில் கட்டடம் சேதமடையும் நிலையில் காட்சியளித்து வருகிறது.

இந்நிலையில் குறித்த பொருளாதார மத்திய நிலையத்தை பகிரங்க கேள்வி கோரலூடாக வழங்கும் பட்சத்தில் விவசாயிகள் நியாயமான விலைக்கு தமது உற்பத்தி பொருள்களை வழங்க முடியும் எனத் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, தற்போது வவுனியாவில் உள்ள மொத்த மரக்கறி கொள்முதலாளர்கள் சர்வாதிகார போக்கோடு செயற்படுவதாகவும் 10 வீதம் என்ற தரகுப்பணத்தை பெறும் நிலை காணப்படுவதோடு சில வேளைகளில் பொருள்கள் விற்பனை செய்யப்படவில்லை என விவசாயிகளிடம் பணம் வழங்கப்படாத நிகழ்வுகளும் சம்பவிக்கிறது.

எனவேபகிரங்கேள்விக்கோரலுக்கு உட்படுத்துகின்ற போது விவசாயிகளின் பொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்கும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே இவ்விடயம் தொடர்பில் விவசாய அமைச்சரும் புதிய அரசாங்கம் ஆவண செய்ய வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். 100





## மன்னார் மறைமாவட்டப் புதிய ஆயராக அருட்தந்தை ஞானப்பிரகாசம் நியமிப்பு

மன்னார் மறை மாவட்டத்தின் புதிய ஆயராக மருதமடு அன்னை திருத்தல பரிபாலகராகப் பணியாற்றிவரும் அருட் தந்தை ஞானப்பிரசாகம் அந்தோனிப்பிள்ளை அடிகளார் திருத்தந்தையால் நியமிக்கப்பட்டுள்ளார்.

2017ஆம் ஆண்டு தொடக்கம் மன்னார் மறைமாவட்டத்தின் ஆயராக பணியாற்றிய இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தனது 76 வயதில் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து அம்மறை மாவட்டத்திற்கு மன்னார் மறைமாவட்ட குருவாகிய அருட்தந்தை ஞானப்பிரசாகம் அந்தோனிப்பிள்ளை அடிகளார் புதிய ஆயராக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருத்தந்தையின் இந்நிய மன செய்தி மன்னார் புனித செபஸ்ரியார் பேராலயத்தில் மன்னார் மறைமாவட்ட குருக்களுக்கென ஒழுங்குபடுத்துப்பட்ட சிறப்பு கூட்டத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையால் உத்தியோகபூர்வமாக வாசிக்கப்பட்டது.

இதன்போது மன்னார் மறைவாட்டத்திலுள்ள ஆலயங்களின் மணிகள் ஒலிக்கப்பட்டு இறைமக்களுக்கும் இச்செய்தி





அறிவிக்கப்பட்டது.

புதிய ஆயராக நியமனம்பெற்ற அருட்தந்தை ஞானப்பிரசாகம் அந்தோனிப்பிள்ளை ஆண்டகை மன்னார் மறைமாவட்ட குருக்களிலிருந்து நியமனம்பெற்ற முதலாவது ஆயரென்பதுடன் தனது குருத்துவஉருவாக்கத்தை யாழ். புனித மடுத்தீனார் சிறிய குருமடத்திலும்



கொழும்புத்துறை புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியிலும் முழுமையாக பெற்றுக்கொண்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அநுர - டில்லி உறவில் தமிழர்களுக்கு இடமுண்டா?

இலங்கை அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்கவின் இந்தியப் பயணம் புதிய அறிகுறிகளைக் காட்டத் தொடங்கியிருக்கின்றது. இந்தியா அவரை எந்தளவு தூரம் தன்னை நோக்கிக் கவர்ந்திழுக்க ஆர்வமாக இருக்கின்றது என்பதை இந்த முதல் பயணத்திலேயே புதுடில்லி நன்கு வெளிப்படுத்தத் தவறவில்லை. இதற்கு மத்தியில் தமிழர்கள் நலன்களை இந்தியா ஒப்புக்குச் சப்பாகக் கையாள்வதைவிடுத்து காத்திரமாகப் பங்களிக்குமா என்பது சந்தேகத்திற்குரியதுதான்.

அரசுத் தலைவரின் இந்தியப் பயணம் மிக முக்கியமானது, இலங்கையின் அரசியல் மிக முக்கியமான கட்டத்தில் நிகழ்ந்துள்ளது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் இந்தியப் பிரதமர் மோடிக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்திருக்கின்றார். ஒற்றையாட்சிக்குக் கீழான தீர்வு ஒன்றுக்கு ஒப்புக்கொள்ளாமல் கூட்டாட்சிக்கு (சமஷ்டி) நகர்வதற்கான உந்துதலை, அழுத்தத்தை அரசுத் தலைவருக்கு இந்தியா கொடுக்கவேண்டும் என்பதும் கஜேந்திரகுமாரின் கோரிக்கைகளில் ஒன்றாக அமைந்திருந்தது. ஆனால், இந்தியா அநுரவிற்கு வழங்கும் கவனிப்பைப் பார்க்கையில் தமிழர்கள் விடயத்தில் இந்தியா அவ்வளவு தூரம் அழுத்தங்களைக் கொடுப்பதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகப்படவில்லை.

போருக்கு முன்னரும் போருக்குப் பின்னரும் இந்தியா தமிழர்கள் விடயத்தில், அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும், தமிழர்களும் ஏற்றுக்கொள்ளும் ஒரு தீர்வை வழங்கவேண்டும் என்று கூறிவருவதைத் தாண்டி அதையேகூட ஒரு அழுத்தமாக இலங்கைக்கு வழங்கக்கூடிய சாத்தியங்கள் மிகக் குறைவு என்பதையே அநுரவின் இந்தியப் பயணம் சுட்டிக்காட்டுகின்றது.

நேற்று மாலை புதுடில்லியைச் சென்றடைந்த அநுரவுக்கு செங்கம்பள வரவேற்புடன் மிகச் சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டுள்ளது. அமைச்சர்கள் அடங்கிய பெரும் இராஜதந்திரிகள் குழு அவருக்கு விமான நிலையத்தில் வரவேற்பு வழங்கியுள்ளது. இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், நிதி அமைச்சர் நிர்மலா, இந்திய பாதுகாப்புச் செயலர் அஜித் நோவால் ஆகியோர் அநுர இருந்த அதி சொகுசு விடுத்திக்கே நேரில் சென்று அவரைச் சந்தித்து உரையாடியுள்ளனர். ஒரு மிக முக்கிய தலைவருக்குரிய கதகதப்பான வரவேற்பு அநுரவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இடதுசாரிப் பின்னணியில் இருந்து வரக்கூடிய அநுர தனது முதல் வெளிநாட்டுப் பயணத்தை சீனாவை நோக்கியதாக அன்றி, இலங்கையின் பாரம்பரியத்திற்கு ஏற்ப இந்தியாவுக்கானதாகத் தெரிவு செய்துகொண்டது இந்தியாவை அதிகம் மகிழ்ச்சிப்படுத்தியிருக்கலாம். பதிலுக்கு அநுரவை மகிழ்விப்பதும் அவரது இந்தப் போக்கைத் தொடர்ந்தும் தக்கவைப்பதும்கூட அதற்குத் தேவையானதுதான். எனவே அநுரவை அசௌகரியத்துக்கு உள்ளாக்கக்கூடிய தமிழர் விவகாரம் உட்பட எந்தவொரு அழுத்தத்தையும் புதுடில்லி வழங்குவதற்கான சாத்தியங்கள் மிகக் குறைவு என்பதை மதிப்பிடுவது கடினமான ஒன்றல்ல.

இந்தப் பயணத்தில் இலங்கையின் அபிவிருத்தி தொடர்பில் இரு நாடுகளுக்கும் இடையில் மூன்று ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்படும் என்று தெரிகிறது. இலங்கையின் அபிவிருத்தியில் இந்தியாவின் பங்களிப்பும் இந்தியப் பெரும் சந்தையும் மிக முக்கியமானது என்பதை அநுரவும் புரிந்து வைத்திருப்பதால் இந்திய நலன்களை சேதப்படுத்தாத அணுகுமுறையை அவரும் கைக்கொள்வார் விட்டுக்கொடுப்பார் என்பதை எதிர்பார்க்கலாம். புதுடில்லிக்கும் அதுவே தலையயாய தேவை என்பதால் தமிழர் அரசியல் தீர்வு அதற்கு அநுரவின் பயணத்தில் ஞாகபத்தில் இருந்தால் அது அசாதாரணமாதே!

# ஆட்சிகளைக் கவிழ்த்த அரபு வசந்தம்; சிரியாவிலிருந்து ரஷ்ய படை வாபஸ்

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

அரபு வசந்தங்களாக எகிப்து, லிபியா, யேமனில் ஆட்சி மாற்றங்கள் நிகழ்ந்தின.

அரபு வசந்தம் தான் அரபு, ஆபிரிக்க நாடுகளின் பேரழிவையும் விளைவித்தது.

இறுதியாக சிரியாவில் உள்நாட்டு யுத்தம் பாரிய அழிவைச் சந்தித்து நிற்கிறது) கிரெம்ளின் அரசின் நீண்ட கால கூட்டாளியான ஜனாதிபதி பஷர் அல்-அசாத் பதவியில் இருந்து வெளியேற்றப்பட்ட பின்னர், சிரிய பிரதேசத்தில் ரஷ்யாவின் விமான மற்றும் கடற்படை தளங்களின் தலைவிதி கேள்விக்குறியாக உள்ளது.

ரஷ்யா தனது சிரிய தளங்களில் இருந்து கிளர்ச்சியாளர்கள் அரசுடன் புதிய ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக மாஸ்கோ தளங்களின் தலைவிதியைப் பாதுகாத்துள்ளதாக ரஷ்ய அரசு ஊடகம் கூறியுள்ளது.

ரஷ்யாவின் ஹெமிமிம் (Khmeimim Air Base) மற்றும் டார்டஸ் தளங்களில் இருந்து தற்காலிகமாக விலகுவதாகக் கூறும் ரஷ்ய இராணுவ பதிவர்கள் உட்பட பல செய்திகள் வந்துள்ளன.

அதேவேளை உக்ரேனிய உளவுத்துறையின் கூற்றுப்படி, ரஷ்யா தனது ஆயுதங்கள் மற்றும் இராணுவ உபகரணங்களை சிரிய தளங்களில் இருந்து வெளியேற்றுகிறது என தெரிவித்துள்ளது.



பின்வாங்கிறது என்பதனை மாஸ்கோ அரசு மறுத்துள்ளது. சிரியாவில் ரஷ்யாவிற்கு இரண்டு இராணுவ தளங்கள் உள்ளன. மத்தியதரைக் கடலோரத்தில் உள்ள டார்டஸ்(Tartus) கடற்படை தளம் உள்ளது.

அத்துடன் லதாகியா துறைமுக நகரத்திற்கு அருகிலுள்ள க்மெய்மிம் விமான தளம் உள்ளது. அவை கிரெம்ளினின் மிகவும் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த இராணுவப் புறக்காவல் நிலையங்களாகக் கருதப்படுகின்றன.

ரஷ்யாவிற்கு மத்தியதரைக் கடலுக்கான



ஒரே நேரடி அணுகல் மற்றும் கடற்படை பயிற்சிகள், போர்க் கப்பல்கள் மற்றும் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்களை நடத்துவதற்கான தளம் ஆகியவற்றை வழங்குகிறது. இதனால் டார்டஸ் தளம் குறிப்பாக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

சிரிய கிளர்ச்சிப் போராளிகள் ஏற்கனவே இரண்டு தளங்களையும் அடிப்படையாகக் கொண்ட லதாகியா மாகாணத்தின் முழு கட்டுப்பாட்டையும் எடுத்துள்ளனர்.

கிரெம்ளின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவின் கூற்றுப்படி, இராணுவ தளங்களின் பாதுகாப்பை உறுதிசெய்யும் திறன் கொண்டவர்களுடன் சிரியாவில் தொடர்பை ஏற்படுத்த நடவடிக்கை எடுப்பதாக கூறுகிறது.

ரஷ்ய செய்தி நிறுவனமான வீபுறீறீ இன் கூற்றுப்படி, பஷர் அல்-அசாத் மற்றும் அவரது குடும்பத்தினர் ரஷ்யாவில் அடைக்கலம் கொடுத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிரியாவுடன் தற்போதய புதிய

சிரியாவில் இருந்து பின்வாங்க, ரஷ்யர்கள் இராணுவ போக்குவரத்து விமானங்களை நிலைநிறுத்தியுள்ளனர். அவை மீதமுள்ள துருப்புக்கள், ஆயுதங்கள் மற்றும் இராணுவ உபகரணங்களை ஏற்றுகின்றன என்று உக்ரைனின் இராணுவ புலனாய்வு நிறுவனம் (HUR) ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அதேவேளை ராய்ட்டர்ஸின் கூற்றுப்படி, ரஷ்யாவின் டார்டஸ் தளத்தின் செயற்கைக்கோள் படங்கள் குறைந்தது மூன்று போர்க்கப்பல்கள் துறைமுகத்தை விட்டு வெளியேறி கடற்கரையிலிருந்து 13 கிமீ தொலைவில் கடலில் நங்கூரம் அமைத்துள்ளன.

அமெரிக்காவை தளமாகக் கொண்ட சிந்தனைக் குழுவான இன்ஸ்டிடியூட் ஃபார் தி ஸ்டடி ஆஃப் வார் (ஐஎஸ்டபிள்யூ) OSINT ஆய்வாளர் எம்டி ஆண்டர்சனின் இக்கூற்றை மேற்கோள் காட்டியுள்ளதுடன், ரஷ்ய கடற்படையின் பெரும்பகுதி துறைமுகத்தை விட்டு வெளியேறி கடலில் 8 கிமீ தொலைவில் நங்கூரமிட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த டிசம்பர் 9 ஆம் தேதி எடுக்கப்பட்ட செயற்கைக்கோள் படங்கள் ரஷ்ய கப்பல்கள்



- அநேகமாக 'அட்மிரல் கோர்ஷ்கோவ்' போர்கப்பல், 'அட்மிரல் கிரிகோரோவிச்' போர் கப்பல், 'நோவோரோசிஸ்க்' நீர்மூழ்கிக் கப்பல், துறைமுகத்திற்கு மேற்கே எட்டு கிலோமீட்டர் தொலைவில் நிறுத்துப்பட்டுள்ளன என்று கூறப்பட்டுள்ளது.

ஆயினும் ரஷ்யாவின் போர்க்கப்பல்கள் இன்னமும் டார்டஸ் தளத்தில் உள்ளன என்று ரஷ்யாவின் வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் கூறியுள்ளார்.

தொடர்ச்சி 5ம் பக்கம்...........


# ஆட்சிகளைக் கவிழ்த்த.....

4ம் பக்கத் தொடர்ச்சி...........

### ஒரு கட்டாய பின்வாங்கல் ?

சிரியாவில் இராணுவப் பிரசன்னத்தை இழந்தது ரஷ்யாவிற்கு பெரும் பின்னடைவாக அமையும். புவியியல் ரீதியாகவும், மூலோபாய ரீதியாகவும், மாஸ்கோ இராணுவச் சொத்துக்களை ஆப்பிரிக்க நாடுகளுக்குக் கொண்டு செல்லும் ஒரு முக்கியமான தளமாகும்.

சிரியாவில் ரஷ்ய தளங்களை இழப்பது ரஷ்ய தளவாடங்கள், மறுவிநியோக முயற்சிகள் மற்றும்




ஆப்பிரிக்கா தொடர்புகளை சீர்குலைக்கும். குறிப்பாக லிபியா, சஹாரா ஆப்பிரிக்காவில் ரஷ்யாவின் செயல்பாடு சக்தியை பலவீனப்படுத்தும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

அசாத்தின் ஆட்சியின் விரைவான கவிழ்ப்பு ரஷ்யாவிற்கும் மத்திய கிழக்கில் அதன் செல்வாக்கை விரிவுபடுத்தும் அதன் லட்சியங்களுக்கும் ஒரு பாரிய அடியை அளித்துள்ளது.

கிளர்ச்சியாளர்கள் டமாஸ்கஸைக் கைப்பற்றிய மின்னல் வேகம், உக்ரைன் போரில் ரஷ்யா கவனம் செலுத்துவதால், கிரெம்ளினின் உறுதியான ஆதரவு இல்லாதது ஓரளவுக்குக் காரணம்.

சிரியாவில் அசாத் ஆட்சியின் வீழ்ச்சி எவரும் கற்பனை செய்ததை விட மிக விரைவாகவும் இரத்தக்களரி குறைவாகவும் இருந்தது. குறிப்பாக ரஷ்யாவும் ஈரானும் அசாத்திற்கு ஆதரவளிக்கும் என்ற நம்பிக்கையே முன்பு அடிப்படையில் இருந்தது.

### ஆட்சிகளை கவிழ்த்த அரபு வசந்தம்:

பல ஆண்டுகளாக உள்நாட்டு கலகம் நடந்த சிரியாவின் தலைநகரை கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியுள்ளமை அரபு நாடுகளில் மேலும் பதற்றத்தை அதிகரித்துள்ளது.

தலைநகரை தாங்கள் கைப்பற்றிய சுனி சார்பு கிளர்ச்சி குழுவின் தளபதி கூறியுள்ளதுடன், அசாத்தின் அரசாட்சியை கைப்பற்ற தாம் நீண்ட காலமாக தயார் படுத்தியதாக ஹயத் தஹ்ரீர் அல்-ஷாம் குழுவின் தலைவர் அகமது அல்-ஷரா தெரிவித்து உள்ளார்.

துனிசியாவில் 2010ஆம் ஆண்டு அன்றைய ஆட்சியாளருக்கு எதிராக மல்லிகைப் புரட்சி என்ற





பெரும் கிளர்ச்சி வெடித்து ஆட்சி மாற்றத்தை நிகழ்த்தியது.

இப்படியாக ஆரம்பித்த அரபு வசந்தம் தான் அரபு நாடுகளிலும, ஆப்பிரிக்க நாடுகளிலும் ஆட்சி அதிகாரத்தை மாற்றியுள்ளது.

அரபு வசந்தங்களாக எகிப்து, லிபியா, யேமனில் ஆட்சி மாற்றங்கள் நிகழ்ந்தின. அரபு வசந்தம் தான் அரபு, ஆப்பிரிக்க நாடுகளின் பேரழிவையும் விளைவித்தது.

இறுதியாக சிரியாவில் உள்நாட்டு யுத்தம் பாரிய அழிவைச் சந்தித்து நிற்கிறது. இந்த அரபு வசந்தத்தின் தாக்குதலுக்கு அல்ஜீரியா, ஈராக், ஜோர்டான், குவைத், மொராக்கோ, சூடானும் தப்பவில்லை. சவூதி, ஓமன், மேற்கு சகாராவிலும் சாடையாக அரபு வசந்தம் எட்டிப் பார்த்து ஓய்ந்தது.

### அரபு வசந்தத்தின் பின்னராக

ரஷ்யாவிற்கு மத்திய கிழக்கில் நிலவும் கடுமையான இராணுவ சமநிலை கீழ் நோக்கி சென்றுள்ளது. மத்தியதரைக் கடலுக்கான ஒரே நேரடி அணுகல் மற்றும் கடற்படை பயிற்சிகள், போர்க் கப்பல்கள் மற்றும் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்களை நடத்துவதற்கான தளம் சிரியாவில் இருந்து தற்போது பின்வாங்கப்பட்டுள்ளது.

இதனால் டார்டஸ் தளம் குறிப்பாக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படும் கடற்படை தளம் மேற்குலகின் கட்டுப்பாட்டில் உடனடியாக செல்லாவிடினும், இஸ்லாமிய அடிப்படைவாத சக்திகள் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வர முயல்வர்.



காலைக்கதிர் Kalaikkathir

# அச்சுறுத்தி அடாவடித்தனம் செய்ய கடவுள்வந்தாலும் அனுமதி இல்லை

## யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் காட்டம்

'என்னையோ உத்தியோகத்தர்களையோ அச்சுறுத்தி அடாவடித்தனம் செய்வதற்கு கடவுளாக இருந்தாலும் அனுமதி இல்லை' எனத் தெரிவித்த யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் தங்கமுத்து சத்தியமூர்த்தி. 'ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கோபம் ஊட்டும் வகையில் கேள்வி கேட்பவர்களை குழப்புபவர்களை அடுத்த கூட்டங்களுக்கு அனுமதிக்க வேண்டாம்' என்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநரிடம் கோரிக்கை முன்வைத்தார்.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் வெள்ளிக்கிழமை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போதே அவர் இக் கோரிக்கையை முன்வைத்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

யாழ். போதனா வைத்தியசாலை எத்தகைய நோய் என்றாலும் சிகிச்சை வழங்கக்கூடிய சகல வசதிகளும் இருக்கின்றன. தற்போதைய நோய் நிலைமை தொடர்பில் பொது மக்கள் பதற்றம் அடையத் தேவையில்லை.

அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உயர் பிரதிநிதிகள் யாராவது வந்தால் அது யாராக இருந்தாலும் மாலை போட்டு வரவேற்பதற்கு தயங்குவதில்லை. இருப்பினும் இந்த வைத்தியசாலை என்ற ரீதியில் நானும் எனக்குக் கீழ் உள்ளவர்களை ஊக்கப்படுத்தி இவ்வாறான சபையிலும் பயம் பதற்றம் இல்லாமல் நடத்துகின்ற இயல்பு என்னிடம் உள்ளது.

போதனா வைத்தியசாலைக்கு 15 நுழைவாயில்கள் இருக்கின்றன. நோயாளிகளுக்கு மாத்திரமல்ல பல உயர் அதிகாரிகள் அன்போடும் பண்போடும் உத்தியோகத்தரிடம் அணுகினால் சேவைகளை பெறுவதும் நோயாளர்களை பார்வையிட வருவதற்கு அவர்களுக்கு ஏற்ற வகையில் தொடர்பாடல் ஏற்படுத்தப்படுகின்றது.

ஆனாலும் எம்மைப் பயப்படுத்தி - உத்தியோகத்தர்களை பயப்படுத்தி - உள்ளே வந்து விதண்டாவாதம் செய்வதற்கு கடவுளாக இருந்தாலும் அனுமதி இல்லை.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்கின்ற போது ஒரு சிலர் பல அரச உத்தியோகத்தர்களுக்கு கோபம் ஊட்டும் வகையில் நடந்து கொண்டால் அவர்களை எதிர்வரும் கூட்டங்களுக்கு அனுமதிக்கக்கூடாது.



இங்கு பல உயர் நிலை உத்தியோகத்தர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மக்களுக்கு சேவை செய்ய வேண்டும். அவர்களுக்கு மன உளைச்சல் ஏற்பட்டால் அரசு இயந்திரத்தை எடுத்து நடத்துவது கடினம். மேலும் தற்காலிக பணியாளர்கள் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டிருந்தது.

பிரதிப் பணிப்பாளரால் ஐம்பது பேர் உள்வாங்கப்பட்டு மூன்று மாத பயிற்சி வழங்கப்பட்டது. அதற்குப் பின்னர் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிபாரிசில் 200 பேர் உள்வாங்க பட்டார்கள்.

தொடர்ச்சியாக அவர்கள் வேதனம் இன்றி கடமையாற்றிமையால் வேலை வாய்ப்பு வருகின்றபோது தங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் தமக்கு நியமனம் தருமாறும் கேட்டிருந்தார்கள்.

இவர்களுக்கு வைத்தியர்கள் மூலம் சிறு தொகைப் பணத்தை வழங்கியிருந்தோம். அவர்கள் வேலைவாய்புக்கு செல்லும் போது அவர்கள் தொடர்து வேலை செய்தமைக்கான சிபாரிசுக் கடிதம் வழங்கமுடியும்.

வேலைவாப்பு வழங்குவது பணிப்பாளரின் கடமையல்ல. இது தொடர்பில் சுகாதார அமைச்சுக்கும் பலதடவைகள் கடிதம் அனுப்பியுள்ளேன். தொண்டர்களுக்கான வேலை வாய்ப்பு ஆளணி நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். - என்றார்.

# தேசிய ஒலிம்பிக் குழுவுக்கு நிதி உதவி இடைநிறுத்தம்

இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவுக்கு சர்வதேச ஒலிம்பிக் குழு மற்றும் ஆசிய ஒலிம்பிக் பேரவை ஆகியவை வழங்கும் நிதி உதவி இடைநிறுத்தப்பட்டுள்ளது.

ஒலிம்பிக் வீரர்களுக்கான புலமைப்பரிசில் கொடுப்பனவுகள் தொடர்ந்து வீரர்களுக்கு நேரடியாக வழங்கப்படும் என சர்வதேச ஒலிம்பிக் குழுவானது இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவுக்கு மின்னஞ்சல் மூலம் அறிவித்துள்ளது.

தேசிய ஒலிம்பிக் குழுவின் விசேட பொதுக்கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற போது, தேசிய ஒலிம்பிக் குழுவின் தேர்தலை விரைவாக நடத்துவதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

தேசிய ஒலிம்பிக் குழுவின் தற்போதைய பதவிக்காலம் 2026 ஆம் ஆண்டு ஏப்ரலுடன் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மக்கள்சேவை செய்வதற்காகவே பதவிகள் வழங்கப்படுகின்றன

## ஆளுநர் வேதநாயகன் அறிவுரை

பதவிகள் சேவை செய்வதற்காக வழங்கப்படுகின்றன. அவற்றைப் பயன்படுத்தி மக்களுக்கு சரியான சேவைகளை வழங்க வேண்டும். இல்லாவிடின் அந்தப் பதவியில் இருப்பதில் அர்த்தமில்லை என வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் நிறுவுநர் நாளும் பரிசளிப்பு நிகழ்வும் பாடசாலையின் ஏழூர் மண்டபத்தில் சனிக்கிழமை காலை பாடசாலை அதிபர் இ.கணேசானந்தன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பங்கேற்ற வடக்கு மாகாண ஆளுநர், சாதனை படைத்த மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பரிசில்களை வழங்கினார்.

அந்த நிகழ்வில் உரையாற்றியபோது மேற்படி தெரிவித்த அவர் அங்கு மேலும் கூறுகையில் -

நாங்கள் கல்வி கற்ற காலத்துக்கும் தற்போதைய காலத்துக்கும் மிகப் பெரிய வித்தியாசம் இருக்கின்றது. அன்று எங்களின் பாடசாலை அதிபர்தான் மேலதிக நேர வகுப்புக்களை எடுத்தார்.

அவர்களைப் போன்ற ஆசிரியர்கள்தான் இன்றும் எங்களுக்கு முன்னுதாரணமான 'கதாநாயகர்களாக' இருக்கின்றார்கள்.

அன்றைய காலத்தில் நாம் தனியார் கல்வி நிலையங்களுக்குகூட செல்வதில்லை. அதற்கான தேவைப்பாடு ஏற்படவில்லை. கல்வியால்தான் மாற்றங்களை ஏற்படுத்த முடியும்.

கிராமத்தின் அபிவிருத்தியோ, எதுவாகினும் கல்வியால் அந்த மாற்றங்களை உருவாக்க முடியும். அதேநேரம் கல்வியில் எவ்வளவு உயர்ந்து





விளங்கினாலும் நாங்கள் பண்புள்ளவர்களாக இல்லாவிட்டால் எம்மை யாரும் மதிக்க மாட்டார்கள்.

உயர்பதவியிலிருந்தாலும் பண்பு இல்லாவிட்டால் யாரும் எம்மை மதிக்க மாட்டார்கள். பதவி வரும் போது பணிவு வரவேண்டும்.

இன்றைய மாணவ சமுதாயத்துக்கு பணிவு, இரக்கம், அன்பு என்பவற்றை ஆசிரியர்கள் கூடுதலாக போதித்து அவர்களை ஒழுக்கமுள்ளவர்களாக மாற்றவேண்டும்.

ஆசிரியர்கள் அன்றைய காலத்தில் எமக்கு அடித்தால் நாம் வீட்டில் சென்று சொல்வதற்குப் பயப்படுவோம். ஏனென்றால் வீட்டிலும் மீண்டும் அடி விழும்.

ஆனால் இன்று அது தலைகீழாகிவிட்டது. ஆசிரியர்கள் மாணவர்களை தண்டிப்பது என்பது அவர்களை எதிரியாகக் கருதி அல்ல. அவர்களின் வளர்ச்சிக்காகவே தண்டிக்கின்றனர்.

இன்று தவறு செய்பவர்களை தட்டிக்கேட்பதற்கே எல்லோரும் தயங்குகின்றனர். அந்தளவு தூரத்துக்கு பயம். நமக்கு ஏன் வீண் வம்பு என்று ஒதுங்கிப்போகின்றனர்.

அதேபோல, வீதிகளில் குப்பை போடுகின்றனர். 1970ஆம் 1980ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தான் மிகத்தூய நகரம். இன்று மிக குப்பையான நகரமாக மாறியிருக்கின்றது.

மோட்டார் சைக்கிள்களில், கார்களில் வந்து குப்பைகளை கொட்டிவிட்டு செல்கின்றனர். வீதியிலும், வாய்க்காலிலும் குப்பை போடுவது நாங்கள் தான்.

வீதிகளையும், வாய்க்கால்களையும் ஆக்கிரமித்து கட்டடங்கள் கட்டுவதும் நாங்கள்தான். பின்னர் வெள்ளம் வந்துவிட்டது என்று கத்துவதும் நாங்கள்தான்.

எங்களின் மனநிலை மாறவேண்டும். இளமையில் - இந்த மாணவர்களிடத்தில் சரியான பழக்க வழக்கங்களை - விழுமியங்களை ஆசிரியர்கள் விதைக்கவேண்டும்.

அப்போதுதான் எதிர்காலத்தில் சிறந்த சமூகத்தை கட்டியெழுப்பக் கூடியதாக இருக்கும். நாம் மற்றவருக்கு உதவவேண்டும். அப்படிச் செய்தால் எமக்கு பல மடங்கு திருப்பிக்கிடைக்கும்.

இந்தப் பழக்கங்களை மாணவர்களிடத்தில் வளர்த்தெடுக்க வேண்டும். எதிர்காலச் சிற்பிகளான மாணவர்கள் சமூகத்தில் கல்வியறிவுடன் சிறந்த ஒழுக்கத்துடன் வளரவேண்டும். ஆசிரியர்கள் வழிகாட்டவேண்டும். - என்றார்.

# ராஜபக்சக்களின் மீள் எழுச்சியைத் தடுப்பதே அமெரிக்கத் தடை அறிவிப்பின் உள்நோக்கம்

## மேன்முறையீடு செய்வேன் என்கிறார் உதயங்க வீரதுங்க

நாட்டில் புதிய ஆட்சி ஏற்பட்டாலும் ஸ்திரமற்ற நிலைமையே காணப்படுகின்றது. இவ்வாறான நிலையில், ராஜபக்ஷக்கள் குறிப்பாக நாமல் ராஜபக்ஷ போன்றவர்கள் மீள் எழுச்சி அடைந்து அதிகாரத்துக்கு வரக்கூடாது என்பதற்காகவே என்னை மையப்படுத்திய அமெரிக்க தடை அறிவிப்பின் உள்நோக்கமாக உள்ளது என்று ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைதூதுவரும் ராஜபக்ஷக்களின் ஒன்றுவிட்ட சகோதரருமான உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கன் விமான சேவையின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேன மற்றும் ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க மற்றும் அவர்களது நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள் ஆகியோர் மீது சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினம் மற்றும் மனித உரிமைகள் தினத்துடன் இணைந்து, உலகெங்கிலும் உள்ள ஊழல் மற்றும் மனித உரிமைமீறல்களுக்கு பொறுப்புக்கூறலை ஊக்குவிப்பதில் அதன் உறுதிப்பாட்டை வலியுறுத்தும் வகையில் அமெரிக்க வெளியுறவுத்துறை தடைகளை விதித்துள்ளது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தால் எயார்பஸ் விமானங்களை அதிக விலைக்கு கொள்வனவு செய்வதை உறுதிப்படுத்துவதற்காக இலஞ்சம் பெற்றதாக கபில சந்திரசேன மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இலங்கைவிமானப்படைக்கு மிக்விமானங்களைகொள்வனவு செய்தமை தொடர்பான ஊழல் வேலைத்திட்டத்தை முன்னெடுத்ததாக உதயங்க வீரதுங்க மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் அமெரிக்க தடை அறிவிப்பு சம்பந்தமாக உதயங்க வீரதுங்க தெரிவிக்கையில் -

அமெரிக்கா என் மீது விதித்துள்ள தடை அறிவிப்பை பார்க்கின்றபோது ஆச்சரியமாகவுள்ளது. அத்துடன் அடிப்படையற்ற காரணங்களையும் அதற்கு கூறியுள்ளமையானது வியப்பளிப்பதாகவும் உள்ளது.

அந்த வகையில் சில விடயங்களை இங்கே தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.



முதலாவதாக, இந்த தடை அறிவிப்பானது தென்னாபிரிக்காவை தளமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனமொன்றின் அறிக்கைக்கு அமைவாக முன்னெடுக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. ஆனால் குறித்த அறிக்கையில் அறுபது பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளபோதும் அவை படை அதிகாரிகளாகவே உள்ளனர். அதில் எனது பெயர் உள்ளடக்கப்படவில்லை என்பது முக்கியமான விடயமாகும்.

அவ்வாறான நிலையில் அமெரிக்கா எனது பெயரை உள்ளீர்த்து தடை விதித்தமைக்கு காரணம் அநுரகுமார தலைமையிலான அரசாங்கத்துக்கு தனது ஆதரவை வெளிப்படுத்துவதற்காகவே ஆகும். அதாவது அமெரிக்காவின் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்க செயலாளர் டொனால்ட் லூ இலங்கைக்கு வருகை தந்திருந்தார்.

இவர் அநுரகுமாரவுடன் பேச்சுக்களை நடத்தும்போது நாட்டுக்கு வெளியில் மோசடியான முறையில் கொண்டு செல்லப்பட்ட பணத்தைமீளப்பெறுவதற்கான தொழில்நுட்ப உதவியை வழங்குவதாக அறிவித்திருந்தார்.

அதேநேரம் அவர்களுக்கு இன்னுமொரு தேவையும் உள்ளது. அதாவது அநுர அரசாங்கம் ஆட்சியில் இருந்தாலும் அவர்கள் ஸ்திரமற்ற நிலையில் தான் உள்ளார்கள். ஆகவே ராஜபக்ஷ குடும்பம் மீள் எழுச்சி கண்டுவிடும். ஆட்சிக்கு வந்துவிடும் என்ற அச்சம் அவர்களுக்கு உள்ளது. குறிப்பாக நாமல் ராஜபக்ஷ தலைமையிலான இளம் தலைமுறையினர் ஆட்சியதிகாரத்தைப் பெற்றுவிடுவார்கள் என்ற அச்சம் இருக்கிறது. இதன் காரணமாகவே ராஜபக்ஷ குடும்பத்தை அடியோடு பலவீனப்படுத்தவேண்டிய தேவை அமெரிக்காவுக்கு ஏற்பட்டுள்ளது. அதனை அநுர அரசுக்கு ஓர் உதவியாகவே அமெரிக்கா செய்கின்றது. இதேபோன்றதொரு நிலைமை முன்பும் காணப்பட்டது.

2015ஆண்டில் ஏற்பட்ட ஆட்சிமாற்றத்தைத்தொடர்ந்து அமெரிக்காவின் வெளிவிவகார இராஜாங்க செயலாளர் ஜோன் ஹெரி இலங்கைக்கு 43 ஆண்டுகளுக்குப் பின்னர் வருகை தந்திருந்தார்.

இவர் இலங்கைக்கு வருகை தந்து அப்போதைய ஜனாதிபதி மைத்திரபால சிறிசேனவைச்சந்தித்திருந்தார். அதன்போதும் வெளிநாடுகளில் ராஜபக்ஷகளுக்கான முதலீடுகளைமீளப்பெற்றுநாட்டுக்குள் கொண்டுவருவதற்குஉதவுவதாகக் கூறப்பட்டது. எனக்கு எதிராகவும் அதன் பின்னர் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னைக் கைது செய்து விளக்கமறியலில் வைத்து வாக்குமூலத்தைப்பெற்றார்கள். அதன்பிரகாரம்சட்டமாஅதிபர் திணைக்களத்திடம்விசாரணை விடயங்களைக் கையளித்து வழக்கு தாக்கல் செய்யுமாறு கூறப்பட்டது. தற்போது பத்து வருடங்களாகின்றன. இன்னமும் சட்டமா அதிபர் திணைக்களம் வழக்குத் தாக்கல் செய்யவில்லை. அப்படியென்றால் வழக்குத் தாக்கல் செய்வதற்கான ஏதுவான நிலைமைகள் சட்டமா அதிபரிடம் இல்லை என்பதுதானே பொருளாகும். சான்றாதாரங்கள் இருந்திருந்தால்ராஜபக்ஷக்கள் அதிகாரத்தை இழந்திருந்த காலத்தில் வழக்கை தாக்கல் செய்து நடவடிக்கைகளை எடுத்திருக்கலாம். ஆனால், எதுவும் நடைபெறவில்லை. ஆகவே சான்றாதாரங்கள் இல்லாதவொரு விடயத்தை மையப்படுத்திதான் அமெரிக்காவும் என் மீது தடை விதித்துள்ளது என்பதை பார்க்கின்றபோதுஆச்சரியமாக உள்ளது.

இதற்கு முன்னதாக அவன்காட் விடயத்திலும் என்னைக் குற்றவாளி என்று பிரசாரம் செய்தார்கள். விசாரணைகளை நடத்தினார்கள். ஆனால் எந்தவிதமான வழக்குகளும்தாக்கல்செய்யப்படவில்லை. அதுபோன்றுதான் மிக் கொடுக்கல் வாங்கலிலும் என்னை மூல காரணகர்த்தா என்று கூறுகின்றார்கள். இதுவொரு வேடிக்கையான விடயமாகும்.

ஏனென்றால் அக்காலத்தில் நான் தூதுவர் பதவியை வகிக்கவில்லை. வெறுமனே உக்ரேன், ரஷ்யாவில்வியாபாரத் தொடர்புகளை மட்டும்தான் வைத்திருந்தேன்.

ஆனால், மிக் கொடுக்கல் - வாங்கல் ஒப்பந்தங்களுக்கான கலந்துரையாடலைச் செய்தது அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ ஆவார். அந்த ஒப்பந்தத்தில்கைச்சாத்திட்டது அப்போதையவிமானத்தளபதி ரொஷான் குணத்திலக்க.

அவ்வாறான நிலையில் மிக் கொடுக்கல் வாங்கல்களில் உண்மையிலேயேமுறைகேடுகள் நடைபெற்றிருந்தால் அவர்களிடத்தில் தான் விசாரணைகள் நடைபெற்றிருக்க வேண்டும். ஆனால் அவ்விதமான விடயங்கள் நடைபெறாமையால் தான் அவர்களிடத்தில் விசாரணைகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை.

ஆகவே, அமெரிக்காவின் தடை அறிவிப்பானது ஏற்றுக்கொள்ளக் கூடியதொன்றல்ல.

அந்த வகையில் குறித்த தடை அறிவிப்புக்கு எதிராக நான் மேன்முறையீடு செய்யவுள்ளேன். அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. - என்றார்.



## ஜனவரி....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

பயணத்தை ஆரம்பிக்கும் பயணிகள் முற்பகலில் பயணத்தை ஆரம்பிப்பதாலும் அவர்களுக்கான உணவுத்தேவையை பூர்த்திசெய்வதில் நெருக்கடிகள் இருந்தன. இதனால் நாம் காலையில் இட்லி, பொங்கல், போன்ற உணவுகளையும் நண்பகலில் மரக்கறி புரியாணி போன்ற மாறுபட்ட உணவுகளையும் பயணக் கட்டணத்துக்கு உட்பட்டதாகவே வழங்கவுள்ளோம்.

அதேபோன்று, நேரடியாக வருவிக்கப்பட்ட பசும்பாலை பயன்படுத்தி தேநீர் மற்றும் கோப்பி ஆகியவற்றையும் குளிர்பாணங்களையும் இலவசமாக வழங்கவுள்ளோம். மேலும், வரிச்சலுகையுடன் பொருட்கள் விற்பனை நிலையமொன்றையும் நாம் படகில் நிறுவுவதற்கான ஏற்பாடுகள் இறுதிக்கட்டத்தினை அடைந்துள்ளது.

சுபம் நிறுவனம் நேரடியாகவே படகுசேவையை கையாளுவதன் காரணமாக பயணச்சீட்டுக்கள் மற்றும் குறுகிய பயணத்திட்டங்களை மையப்படுத்திய புதிய இணையதளம் (விழிஷ்யிவிற்ணுஜூழிது. உலிது) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த இணையத்தளத்தில் குறுகிய பயணத்திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. உதாரணமாக, இரண்டு இரவு மூன்று பகல் தங்குமிட மற்றும் உள்ளக போக்குவரத்து வசதிகளுடன் காணப்படுகின்றது. இதற்கான தொகை இந்திய ரூபாவில் 15ஆயிரமாக காணப்படுவதோடு இலங்கை ரூபாவில் 50ஆயிரம் வரையில் இருக்கின்றது. இவ்விதமான திட்டங்கள் நடுத்தர பயணிகளை மையப்படுத்தியதாகவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் வடக்கு மாகாணம் இயற்கை வளங்கள் நிறைந்ததாக காணப்படுகின்றது. பிரசித்திபெற்ற சமயத்தலங்கள், வரலாற்று இடங்கள், கலாசார முக்கியத்துவ பகுதிகள் உள்ளிட்ட பலதரப்பட்ட சிறப்புக்களை கொண்டிருக்கின்றன. சுற்றுலாப்பயணிகளை இந்தப்பகுதிகள் மிகவும் கவர்ந்தவையாக இருக்கின்றன என்பதை எம்மால் உறுதியாகக்கூற முடிகின்றது. ஆகவே குறைந்த செலவில் சுற்றுலாப்பயணிகள் பயணங்கள் மேற்கொள்வதற்கான வாய்ப்புக்களை நாங்கள் ஏற்பாடு செய்துள்ளதோடு தொடர்ச்சியான படகுசேவையை முன்னெடுப்பதற்கும் தீர்மானித்துள்ளோம் - என்றார்.

## எலிக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோயாளகளைப் பார்வையிட்டு வைத்தியர்களுடன் ஆலோசனையில் ஈடுபட்டார் யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் கேதீஸ்வரன்.

இதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தில் தற்போது பரவி வருகிற எலிக் காய்ச்சல் காரணமாக இதுவரை 76 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் 11 பேரும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 28 பேருமாக 39 பேர் விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இன்று (ஞாயிறு) காலையுடன் முடிந்த கடந்த 24 மணித்தியாலத்தில் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் 13 நோயாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இருந்து மூன்று நாட்களுக்கு முன்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்ட ஒருவர் சனியிரவு உயிரிழந்துள்ளார்.

அவர் கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த துன்னாலை கிராமத்தில் வசிக்கும் 23 வயதானவர். இவருடன் சேர்த்து யாழ். மாவட்டத்திலே இதுவரையில் எலிக் காய்ச்சலுடன் தொடர்புபட்டு 7 இறப்புக்கள் ஏற்பட்டுள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு இறப்பு பதிவாகியுள்ளது.

வடக்கில் மொத்தமாக 8 இறப்புக்கள் ஏற்பட்டுள்ளன. யாழில் ஏற்பட்ட இறப்புக்களில் 3 பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் 2 கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் 2 இறப்புக்கள் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் ஏற்பட்டுள்ளன. இதனால் இந்தப் பகுதிகளில் எலிக் காய்ச்சல் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

இதனால் இப்போது காய்ச்சலுக்குச் சிகிச்சை பெற வருபவர்கள் நேரகாலத்துடன் வருகின்றனர். தடுப்பு மருந்து வழங்கும் நடவடிக்கை நான்காவது நாளாக இடம்பெற்று வருகின்றது - என்றார்.

## இந்தியாவிடமிருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கன்றன.

இலங்கை ஜனாதிபதி இந்தியா பயணிக்கின்றார். அவரது பயணத்தின்போது இலங்கை சம்பந்தமான இன்னும் பல திட்டங்கள் தொடர்பான அறிவிப்பை இந்தியாவிடமிருந்து எதிர்பார்க்கலாம். குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான பல திட்டங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. இது ஒரு ஆரம்பம்தான். எதிர்காலத்தில் பல விடயங்களோடு சேர்ந்து பயணிப்போம்.

ஒக்டோபர் மாதம் இறுதியில் பெரிய அளவிலான கூட்டம் ஒன்று இடம்பெற்றிருந்தது. அதில் இலங்கை இந்திய அதிகாரிகள் சந்தித்திருக்கிறார்கள். ஆனால் மீனவர்கள் நேரில் சந்திப்பது இதுவரை நடைபெறவில்லை. அது இடம்பெறுமாயின் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் - என்றார்.

**காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு**

**076 3983858**

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# கல்வி இளமாணி ஆசிரியர் மாணவர்களின் கண்காட்சி அட்டாளைச்சேனையில் நேற்று



(பாறுக் ஷிஹான்)

அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் கல்வி இளமாணி சிறப்பு கற்கை நெறிக்காக 2022-2025 ஆம் ஆண்டு ஆரம்பப் பிரிவு ஆசிரியர் மாணவர்களால் ஆரம்பப் பிரிவுக்கான விஞ்ஞானம் எனும் தொனிப் பொருளில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) கண்காட்சி நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியாக கணேசரத்தினமும் கௌரவ அதிதிகளாக ஆரம்பப் பிரிவு ஆசிரியர் மாணவர்களுக்கு வழிகாட்டல் விரிவுரையாளர்களாக கடமையாற்றிய கே. கமலதாசன் மற்றும் எம்.எச்.எஸ்.ஆர் மஜீதிய்யா ஆகியோரும் விசேட அதிகளாக ஏ.எம். முபாரக் கே.எல்.எம். பார்சாட் ரி. திலகாராஜா உட்பட ஏனைய விரிவுரையாளர்களான ஏ.ஜே. வசீல் ஏ.ஏ. ரமீஸ் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



இந்நிகழ்வுகளுக்கு இணைப்பாளராக எஸ்.என்.ர அருஸ் கடமையாற்றுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# அல்-அஸ்ஹர் மத்திய கல்லூரியில் இலவச ஊடகச் செயலமர்வு

(ஸாகிர்)

கண்டி தெநுவர வலயத்திற்குட்பட்ட தெகியங்க அல்-அஸ்ஹர் மத்திய கல்லூரியின் (தேசிய பாடசாலை) ஊடகப்பிரிவு மாணவர்கள் மற்றும் உயர்தர மாணவர்களுக்கான இலவச ஊடக செயலமர்வு அண்மையில் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

ஆர்.ஜே.மீடியா வலையமைப்பின் கண்டி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பாத்திமா சப்னாவின் ஏற்பாட்டில், கல்லூரியின் அதிபர் எம்.மன்சூர் மபாஹிர் அனுமதியுடன் பிரதி அதிபர் உஸ்மான் லெப்பை மொஹமட் ரிஸான் அவர்களின் கண்காணிப்பின் கீழ் இடம்பெற்ற இந்நிகழ்வில், ஊடகத்துறையின் அவசியம் மற்றும் எமது இலக்கை வெற்றிகரமாக மாற்றுவது எப்படி போன்ற தலைப்புகளை உள்ளடக்கி செயல்முறையுடன் கூடிய விரிவுரைகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

இந்த அமர்வின் விரிவுரைகளை ஆர்.ஜே.மீடியா வலையமைப்பின் பணிப்பாளரும் அறிவிப்பாளருமான ஏ.எம்.இன்சாப் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

இதில் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.





# 20 லீற்றர் கசிப்புடன் ஒருவர் வீரமுனை பகுதியில் கைது

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீரமுனை பல்நோக்கு கூட்டுறவு வீதியில் கசிப்புடன் ஒருவரை சனிக்கிழமை இரவு 08.00 மணியளவில் சம்மாந்துறை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

சம்மாந்துறை விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டு இருந்த 20 லீற்றர் கசிப்பையும், சந்தேக நபரையும் கைது செய்துள்ளனர்.

வீரமுனை 04, சம்மாந்துறை பகுதியைச் சேர்ந்த நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.



சந்தேக நபரிடம் இருந்து 20 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது.

இதன்போது, கைது செய்யப்பட்ட அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் வீரமுனை பிரதேசத்தில் உள்ள பிரபல வியாபாரி ஒருவருடைய கசிப்பு என அறியக் கிடைத்துள்ளது.

இதனையடுத்து, சந்தேக நபரை சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், இந்த கைது நடவடிக்கையானது சம்மாந்துறை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ரத்னமல்லவின் பணிப்புரைக்கமைய உப பொலிஸ் பரிசோதகர்களான ஜெயஸ்ரீ மற்றும் விஜயஸ்ரீ, விசேட அதிரடிப் படை சார்ஜன் சாகர, சார்ஜன் பண்டார, சாரதி குமார ஆகியோரால் குறித்த கைது முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

## தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்றுக்கொள்பவர்கள் சேர்ந்து பயணிக்கலாம் என்று தெரிவித்திருந்தார்.

”கடந்த காலத்தில் அரசமைப்பு உருவாக்கம் சம்பந்தமாகத் தமிழ் அரசுக் கட்சி தீர்க்கமான நிலைப்பாடுகளை எடுத்திருக்கின்றது. சில வரைவுகள் செய்யப்பட்டு இருக்கின்றன. சில வரைவுகளோடு நாங்கள் இணங்கி இருக்கின்றோம். அதனைத் தொடர்ந்து கோத்தபாய ராஜபக்சவினுடைய காலத்தில் அவர் நியமித்த குழுவுக்கு முன்பாகவும் நாங்கள் சென்று எங்களுடைய நிலைப்பாட்டை எழுத்து மூலமாகக் கொடுத்திருக்கிறோம். அவையெல்லாம் எங்கள் கட்சியினுடைய நிலைப்பாடு. அந்த நிலைப்பாட்டோடு ஒத்து வருகின்றவர்கள் இருந்தால் சேர்ந்து பயணிப்பதில் எந்த ஆட்சேபனையும் கிடையாது. ஆனால் வேறு சிலர் எங்களுடைய கட்சிக்குப் போட்டியாக வேண்டுமென்றே வெவ்வேறு வரைவுகளைச் செய்து சில குழப்பங்களை ஏற்படுத்தி இருக்கிறார்கள். அவ்வாறான குழப்பங்களைச் செய்தவர்களோடு அவர்களுடைய வரைவுக்கு இணங்கிச் செல்ல வேண்டிய அவசியம் நமக்குக் கிடையாது.

தமிழ் அரசுக் கட்சி தமிழர்களுடைய பிரதான கட்சி. வடக்கு கிழக்கில் சகல மாவட்டங்களில் இருந்தும் பிரதிநிதிகளைத் தெரிவு செய்திருக்கின்ற ஒரே ஒரு கட்சி இலங்கை தமிழர் கட்சி. எமக்கு மக்கள் கொடுத்த அந்த ஆணையை மீறிச் செயல்பட மாட்டோம். மற்றவர்கள் எங்களோடு, எங்களுடைய நிலைப்பாட்டோடு இணைந்து செயல்படுவதற்கு வருவார்களாயின் எமக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை” என்று சுமந்திரன் தெரிவித்திருந்தார்.

சுமந்திரனின் இந்தக் கருத்துக்கு தீர்வு விடயத்தில் பேசியே ஒரு இணக்கத்திற்கு வரமுடியும் என்று செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

தமிழர்களைப் பொறுத்தவரை பல பிரச்சனைகள் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. எனவே இனப் பிரச்சினை சார்ந்த விடயத்தில் ஒரு கட்சி எடுக்கும் முடிவிற்கு ஆதரவாக மற்றக் கட்சிகள் செல்வதென்பது சாத்தியமில்லை.

ஒன்றாக இணைந்து ஒரு மேசையில் இருந்து விவாதித்து ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைக்கும்போதே அது வலுவானதாகவும், பலமானதாகவும் இருக்கும். அதன் மூலமே புதிய அரசமைப்பில் எவ்வாறான கோரிக்கையினை முன் வைக்கலாம் என்பதைத் தீர்மானிக்க முடியும்.

தமிழ் அரசுக் கட்சி கூடுதலான ஆசனங்களை பெற்றுவிட்டது என்பதற்காக அவர்கள் எடுக்கின்ற முடிவிற்கு ஏனையவர்கள் ஒத்து வரவேண்டும் என்று சொல்வது முறையற்ற செயல். தேர்தல் வெற்றிகளை வைத்து இதனைப் பார்க்கமுடியாது.

ஒற்றுமையாக ஒரு தீர்வு திட்டத்தை முன்வைக்கின்றபோதே எமது மக்களும் அதை விரும்புவார்கள். அந்த பலத்தின் மூலமே ஆளும்தரப்பின் பார்வையை எமது பக்கம் திருப்ப முடியும். தனித் தனியாகச் செயற்பட்டால் அதை வைத்து அரசியல் செய்யும் நிலையில் புதிய ஆளும்தரப்பும் ஈடுபடும்.

பிரிந்து சென்றதால் நாம் பல பாடங்களை கற்றிருக்கிறோம். எனவே நாங்கள் செய்வோம் நீங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று சொல்வது சாத்தியற்ற ஒன்றாகவே நான் பார்க்கிறேன். சுமந்திரன் அவர்களுக்கும் இது நன்றாக தெரியும். அவரும் ஒத்து வருவார் என்று நினைக்கிறேன். தமிழ் அரசுக் கட்சியும் ஒத்து வரும் என்று நினைக்கிறேன் என்றார்.

(100)

## இந்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளது.

தற்போதைய ஆளும்தரப்பு கடந்த ஒக்டோபர் தொடக்கம் இந்த மாத இறுதிவரை எடுக்கக்கூடிய மொத்தக் கடனைவிடச் சிறிய அளவிலான கடனையே பெற்றுள்ளதாக அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது.

ஆளும்தரப்பு அதிகமாகக் கடன் வாங்குகிறது என்று சிலர் வாதிடுகின்றனர், மேலும் சிலர் ஆளும்தரப்பின் கடன் ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவிலேயே இருப்பதாகவும் வாதிடுகின்றனர். இருப்பினும் ஆளும் தரப்பு குறைந்த கடன்களையே பெற்றுள்ளது என்று ’வெரிட்டி ரிசர்ச் இன்ஸ்டிடியூட்’ என்ற உண்மை ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், தற்போதைய அரசாங்கத்தின் கடன்கள் வரவு செலவுத் திட்ட இடைவெளியை ஈடுசெய்ய பயன்படுத்தப்படுகிறதா அல்லது வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்துவதற்குப் பயன்படுத்தப்படுகிறதா என்பதிலும் கருத்து மோதல்கள் ஏற்பட்டுள்ளதாக இந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

முதன்மைப் பற்றாக்குறையை ஈடுகட்டவும், கடன் வட்டியைச் செலுத்தவும், முதிர்ச்சியடையும் கடனின் அசல் தொகையைத் தீர்க்கவும் முதன்மையாக ஆளும்தரப்புக் கடன் வாங்குகிறது என்றும், ஆண்டுதோறும் நிறைவேற்ற வேண்டிய இந்த 3 கடமைகளின் மதிப்பையும் கூட்டும்போது வ-ஷரும் மொத்தத் தொகை ஏற்ப ஒவ்வொரு ஆண்டும் ஆளும்தரப்புக்கள் கடன் பெறுகின்றன.

2024 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி, இந்த நாட்டின் ஆளும்தரப்பு அதன் மொத்த நிதித் தேவைகளுக்காக இந்த ஆண்டு 3,670 பில்லியன் ரூபாவை கடனாகப் பெறும் என எதிர்பார்க்கப்பட்டதாக வெரிட்டி ரிசர்ச் நிறுவனம் தெரிவித்துள்ளது. ஆனால் நிதியமைச்சின் தரவுகளின்படி, கடந்த ஜனவரி முதல் செப்டம்பர் வரையிலான காலப்பகுதியில் -முன்னைய ஆளும்தரப்பு எடுத்த கடன் தொகை 1,903 பில்லியன் ரூபாயாகும் என வெரிட்டி ரிசர்ச் நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதன்படி, கடந்த ஒக்டோபர் மாதம் தொடக்கம் இம்மாத இறுதிவரையான காலப்பகுதியில் தற்போதைய அரசாங்கம் 1,766 பில்லியன் ரூபாவை கடனாகப் பெற்றிருக்க முடியும். அதுமட்டுமன்றி கிடைக்கக்கூடிய தரவுகளின் அடிப்படையில், தற்போதைய ஆளும்தரப்பின் காலத்திற்கான கடன் மதிப்பீடுகளை மீள்பரிசீலனை செய்யும்போது, இந்தக் காலக்கட்டத்தில் ஆளும்தரப்பு எடுத்திருக்கும் கடன் தொகை 1,612 பில்லியன் ரூபாய். இது பெறப்படவேண்டியதிலும் பார்க்கக் குறைவானது என்று ’வெரிட்டி ரிசர்ச்’ நிறுவனம் தெரிவித்துள்ளது.



# தில்லை ஆறு - சம்புக்களப்பை ஆழமாக்கி அகலமாக்கும் வேலையை விரைவாக்குக

## அம்பாறை ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் உதுமாலெப்பை கோரிக்கை.

(அஷ்ரப்கான்)

தில்லைஆறு-சம்புக்களப்பை ஆழமாக்கி அகலமாக்கும் வேலைத்திட்டத்தை விரைவாக ஆரம்பிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பை அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடுத்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் குறிப்பிடும்போது -

கல்லோயா திட்டத்தால் அட்டாளைச்சேனை, அக்கரைப் பற்று, ஆலையடி வேம்பு , திருக்கோவில், பிரதேசங்களில் அமைந்துள்ள 8500 ஏக்கர் விவசாயக் காணிகள் நீரில் மூழ்கி உள்ளன.

வெள்ளம் ஏற்படும் எல்லாக் காலங்களிலும் மேற்படி பிரதேச மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்படுகின்றனர்.

உலக வங்கித் திட்டத்தில் தில்லை ஆறு - சம்புக் களப்பை ஆழமாக்கி அகல மாக்க 30 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் இதுவரைக்கும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்படாமல் உள்ளமை கவலைக்குரிய விடயமாகும். எனவே, இவ் வேலைத்திட்டத்தை விரைவாக ஆரம்பிக்க வேண்டும் எனவும் இது தொடர்பாக பிரதேச செயலாளர்கள், பிரதேச சபைகளின் செயலாளர்கள், விவசாய அமைப்புகள் எல்லோரும் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு ஒத்துழைப்பை வழங்கத் தயாராக உள்ளனர்.

எனவே இப்பிரதேசமக்களின் நன்மை கருதி விரைவாக இவ் வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க வேண்டும் என அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டதில் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் கடந்த வருடமும் ,இவ் வருடமும் ஏற்பட்ட வெள்ளத் தால் விவசாயிகளுக்கு தொடர்ந்து பாரிய நஷ்டம் ஏற்பட்டுள்ளதுடன் பொருளாதாரமும் பாரிய வீழ்ச்சி அடைந்துள்ளது. வெள்ளம் ஓடுவதற்குதடையாக இருக்கும் அணைக்கட்டுக்கள், பிரதான வாய்க்கால்கள் புனரமைக்கபடவேண்டும் எனவும்

சம்மாந்துறை தொப்பி யங்கொட புனரமைக்கப் படாமல் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சுக்கு சொந்தமான தீகவாபி - களியோடை வீதி ,தீகவாபி - பாலமுனை வீதிகளுக்கு 250 மில்லியன் ரூபா செலவில் புணரமைப்பு செய்யும் செயற்பாடுகள் பிரயோசனமற்றதாக மாறிவிடும்.

எனவே வெள்ளத்தால் பாதிக்கப்படும் பிரதேசங்களை அடையாளம் கண்டு எதிர் காலத்தில் நிரந்தர தீர்வுகளுக்கு திட்டமிட்டு செயற்படவேண்டும். இல்லையென்றால் அரசின் பெருந்தொகையான பணம் வருடா வருடம் வீண் விரயம் செய்யப்பட வேண்டிய நிலைமை ஏற்படும்.

இதேவேளை பொத்துவில் பிரதேசத்தில் அமைந்துள்ள துவ்வை ஆறு அணைக்கட்டு ஒவ்வொரு வெள்ளத்தின் போதும் சேதமடைவதால் பசறிச்சேனை கிராமமே வெள்ளத்தில் மூழ்குவதுடன் அப் பிரதேச மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

பொத்துவில் துவ்வை ஆறு அணைக்கட்டை விசேட அபிவிருத்திதிட்டத்தில் சேர்த்து புனரமைக்க வேண்டும்.

இதே வேளை ஹெட ஓயா நீர்ப்பாசனத் திட்டம் செயற்படுத்தப்பட்டால் அம்பாறை மாவட்டத்தில் மூவின மக்களின் ஆயிரக்கணக் கான விவசாய காணிகளுக்கும் நீர்ப்பாசனம் கிடைக்கும். எனவே ஹெட ஓயா நீர்ப்பா சனத் திட்டத்தின் பணிகளை முன்னெடுக்க வேண்டும்.

நீர்ப்பாசனத் திணைக்க ளத்திடம்நிதிஇல்லையென்றால் வெளிநாட்டு நிதியை பெறுவதற்கான ஏற்பாடுகளை நீர்ப்பாசனத் திணைக்களம் மேற்கொள்ள வேண்டும்.

இவ் வருடம் அம்பாறை மாவட்ட அபிவிருத்தி



நடவடிக்கைகளுக்கு ஒதுக்கப் பட்டுள்ளநிதியில்300மில்லியன் ரூபா பயன்படுத்துப்படாமல் திருப்பி அனுப்பிய விடயம் மிகவும் கவலைக்குரியதாகும்.

கல்முனை, சம்மாந்துறை ,அக்கரைப்பற்று கல்வி வலயங்களுக்கு உட்பட்ட 11 பாடசாலைகளுக்கு ஒதுக்கப் பட்ட பெருந்தொகை நிதி திருப்பி அனுப்பப்பட்டதாக அப் பாடசாலைகளின் அதிபர்கள் ,அபிவிருத்திச் சங்க குழுக்கள் என்னை சந்தித்து இவ்விடயத்தை எனது கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சிடமும் நிதிப் பற்றாக் குறை நிலவும் இந்தக் காலகட்டத்தில் மத்திய அரசால் பாடசாலை அபிவிருத்திக்காக வழங்கப்பட்ட நிதிகள் திருப்பி அனுப்பப்பட்டமை கவலைக்குரிய விடயமாகவும்.

எனவே, அடுத்த வருட அபிவிருத்திநடவடிக்கைகளுக்கு நிதி ஒதுக்கப்படும்போது, இப்பாடசாலைகளுக்கு முன்னுரிமைவழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.



காலைக்கதிர் Kalaikkathir

# நீர்த்தேக்கத்தில் இருந்து பெண்ணின் சடலம் மீட்பு

(கேதீஸ்)

மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தில் இனந்தெரியாத பெண்ணொருவரின் சடலம் மிதந்த நிலையில் சனிக்கிழமை மீட்கப்பட்டதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

நீர்த்தேக்கத்தின் வான்கதவுகள் அமைந்துள்ள பிரதான அணைக் கட்டுக்கு அருகில் இந்த சடலம் மீட்கப் பட்டுள்ளதாகவும், இது 35 முதல் 40 வயதுடைய பெண் ஒருவருடையதாக இருக்கலாம் என சந்தேகிக்கப் படுவதாகவும் பொலிஸார் தெரிவிக்



கின்றனர்.

நீர்த்தேக்கத்தின் கழிவுகள் சேகரிக்கும் இடத்தில் கழிவுகளுக்கு மத்தியில் சடலம் கிடந்துள்ளது. சடலத்தை மீட்ட தலவாக்கலை பொலிஸார் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுத்துள்ளனர்.

சடலம் இதுவரை அடையாளம் காணப்படாத நிலையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# கல்முனை மாநகர சபைக்கு மருதமுனை அனர்த்த முகாமைத்துவக் குழு பாராட்டு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கடந்த வெள்ளப் பெருக்கின்போது கல்முனை மாநகர சபை முன்னெடுத்த அனர்த்தக் கட்டுப்பாடு மற்றும் மீட்பு நடவடிக்கைகளை மருதமுனை அனர்த்த முகாமைத்துவக்குழு பாராட்டியுள்ளது.

மருதமுனை அனர்த்த முகாமைத்துவக் குழுவின் பிரதிநிதிகள் அதன் தலைவர் மௌலவி எப்.எம்.ஏ. அன்ஸார் மௌலானா தலைமையில் வெள்ளிக்கிழமை கல்முனை மாநகர சபைக்கு விஜயம் செய்து - உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீமை சந்தித்து - மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ் அவர்களுக்கு முகவரியிடப்பட்ட பாராட்டுக் கடிதத்தை கையளித்தனர்.





கடந்த நவம்பர் மாதம் பிற்பகுதியில் தாழமுக்கம் காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு அனர்த்தத்தில் இருந்து மக்களையும் சொத்துகளையும் பாதுகாப்பதற்காக கல்முனை மாநகர சபையானது துரிதமாக செயற்பட்டு மிகவும் அர்ப்பணிப்புடன் இரவு பகலாக இப்பணிகளை சிறப்பாக முன்னெடுத்திருந்தமை மிகவும் போற்றத்தக்க பணியாகும் என்று பாராட்டியுள்ள மருதமுனை அனர்த்த முகாமைத்துவக்குழு - இச்சேவைக்காக மக்கள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாகக் குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை எதிர்கால அனர்த்தங்களைக் கருத்தில் கொண்டு மருதமுனை பிரதேசத்தில் மேலதிகமாக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் பல்வேறு முன்மொழிவுகளை மருதமுனை அனர்த்த முகாமைத்துவக் குழுவினர் இதன்போது கல்முனை மாநகர சபையிடம் சமர்ப்பித்து அவற்றை கூடிய விரைவில் நிறைவேற்றித் தருமாறு வலியுறுத்தியுள்ளனர்.

# கனேடிய நாட்டு வெளிவிவகார அமைச்சின் அழைப்பில் சிறிதரன் ஒட்டோவா பயணம்

## இந்தோ – பசுபிக் பிராந்திய பிரதியமைச்சருடனும் முக்கிய சந்திப்பு

கனேடிய வெளிவிவகார அமைச்சின் அழைப்பில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக்குழுக்களின் தலைவருமான சிவஞானம் சிறிதரன் ஒட்டோவா நோக்கிப் பயணமாகியுள்ளார்.

இந்தப் பயணத்தின்போது, கனடாவின் வெளிவிவகார அமைச்சின் இந்தோ-பசுபிக் பிராந்தியங்களுக்கான பிரதியமைச்சர் வெல்டன் எப்பை சந்தித்து உரையாடவுள்ளார்.

இந்தச் சந்திப்பு ஒட்டோவில் உள்ள வெளிவிவகார அமைச்சின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. அதன்போது, பொறுப்புக்கூறல், இந்தோ-பசுபிக்பிராந்தியத்தின் சமகால அரசியல் சூழல்கள், தமிழ் மக்களின் நெருக்கடிகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக பேசப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடிய பிரதியமைச்சருடனான சந்திப்பின்போது இலங்கைத் தமிழரசுக்கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசனும் பங்கேற்கவுள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் 23ஆம் திகதி வரையில் கனடாவில் தங்கியிருக்கவுள்ள சிறிதரன் எம்.பி. அங்கு பல்வேறு தரப்பினரையும் சந்தித்து உரையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனை மெதடிஸ்த திருச்சபையின் நத்தார் இன்னிசை ஆராதனை நிகழ்வு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மெதடிஸ்த திருச்சபையின் நத்தார் இன்னிசை ஆராதனை நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்றது.

அருட்திரு. ரவி முருகுப் பிள்ளை தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஞாயிறு பாடசாலை மாணவர்கள், வாலிபர் சங்கம், பெண்கள் சங்கம் மற்றும் ஆண்கள் சங்க உறுப்பினர்களால் நத்தார் கீதங்கள் இசைக்கப்பட்டன.

ஒப்பற்ற பரிசு கிறிஸ்துவே என்ற தலைப்பில் இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் வடக்கு திரு மாவட்ட அவையின் முன்னாள் தலைவர் அருட்திரு எஸ்.டி. தயாசீலன் இறை செய்தியை வழங்கினார்.










இவ்வழிபாட்டில் அருட்செல்வி சுலோஜினி, சகோதரி அதிஸ்டவதி, சகோதரர் கதிரேசன் உட்பட பொது மக்களும் கலந்து சிறப்பித்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# அட்டாளைச்சேனை பிரதேசத்தில் பழைமை வாய்ந்த பாலம் சேதம்

(றமீஸ்)

அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில் கடந்த 46 வருட கால பழைமை வாய்ந்த பாலமொன்று சேதமடைந்து காணப்படுவதாக பிரதேசமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அட்டாளைச்சேனைப் பிரதேசத்தினையும், றஹ்மானியாபாத் பிரதேசத்தையும் இணைக்கும்அட்டாளைச்சேனை பிரதேசத்தில்அமையப்பெற்றுள்ள பிரதான பாலமே இவ்வாறு சேதடைந்துள்ளது.

அண்மையில்ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின்போது இப்பாலம் சேதமடைந்திருந்திருக்கலாம் என பிரதேசமக்கள்; தெரிவிக்கின்றனர்.

கடந்த சில தினங்களாக இப் பாலம் உடைப்பெடுத்து வருவதோடு, சில பகுதிகள் கீழிறங்கி வருவதாகவும் தெரிவிக்கும் பொதுமக்கள் இதனால் பயணிக்கும் வேளையில் அச்சநிலை ஏற்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

நாளாந்தம் பலநூற்றுக்கணக்கான பொதுமக்கள் இப்பாலத்தின் மூலமாக பயணம் செய்து வருகின்றனர். அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று பிரதேச மக்கள் இப்பாலத்தை அதிகம் பயன்படுத்தி வருவதோடு, இப்பாலத்தின்மூலமாகஒலுவில், திராய்க்கேணி, பாலமுனை போன்ற பிரதேசங்களுக்கு செல்வதற்காக இப்பிரதேச மக்கள் இப்பாலத்தை பயன்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின்போது இப்பாலத்தின் கீழ்ப்பகுதியில் அதிகளவான நீர்த்தாவரங்கள் நிறைந்து காணப்பட்டதால் பொதுமக்களின் உதவியுடனும், கனரக இயந்திரங்களின் துணையுடனும் இப்பாலத்தினை சூழ்ந்து காணப்பட்ட நீர்த்தாவரங்கள் அப்புறப்படுத்தப்பட்டன.





சேதமடைந்து வரும் இப்பாலத்தின் நிலைமையைப் பார்வையிட்டு இதனை செப்பனிடும்வகையில்நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு துறைசார் உயரதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள் என பலர் விஜயமொன்றை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 1978 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 28 ஆம் திகதி முன்னாள் பொத்துவில் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.எம்.ஜலால்டீனின் அழைப்பின் பேரில் பிரதமர் ஆர்.பிரேமதாஸவால் இப்பாலம் திறந்து வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# போலி கல்வித் தகைமையுடன் ஆளும் தரப்பில் மேலும் 7 பேர்

## சபாநாயகர் எம்.பி. பதவியையும் துறக்க வேண்டும் என்கிறார் சானக

போலியானகல்வித்தகைமையைசமர்ப்பித்துள்ள தேசிய மக்கள் சக்தியின் 07 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சு மற்றும் பிரதி அமைச்சு பதவிகளில் இருந்து விலக வேண்டும். கலாநிதி என்று குறிப்பிட்டுக்கொண்டு தேர்தலில் போட்டியிட்ட அசோக்க ரன்வல நாடாளுமன்ற உறுப்புரிமையை துறக்க வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் டி.வி. சானக தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை பகுதியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

நாடாளுமன்றத்தை சிரமதானம் செய்ய வேண்டும், படித்தவர்களால் நாடாளுமன்றம் நிரப்பப்பட வேண்டும் என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க குறிப்பிட்டார். நாட்டு மக்களும் தேசிய மக்கள் சக்திக்கு 159 ஆசனங்களுடன் மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆதரவை வழங்கினார்கள்.

இல்லாத கலாநிதி பட்டத்தை இருப்பதாக குறிப்பிட்டுக் கொண்டே தேசிய மக்கள் சக்தி சார்பில் அசோக்க ரன்வல கம்பஹா மாவட்டத்தில் போட்டியிட்டார். அவ்வாறாயின் அசோக்க ரன்வல கம்பஹா மாவட்ட மக்களையும் ஏமாற்றியுள்ளார்.



மக்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்திய காரணத்தால் தான் அசோக்க ரன்வல சபாநாயகர் பதவியை இராஜினாமா செய்தார். பொய்யான கல்வித் தகைமையைக் குறிப்பிட்ட அசோக்க ரன்வலவுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கை என்ன? அசோக்க ரன்வல நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்ய வேண்டும்.

போலியானகல்வித்தகைமையைசமர்ப்பித்துள்ள தேசிய மக்கள் சக்தியின் 07 நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சு மற்றும் பிரதி அமைச்சு பதவிகளில் இருந்து விலக வேண்டும்.

தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களின் கல்வி தகைமை குறித்து ஆராய்வதற்கு நாடாளுமன்றத்தில் பரீட்சைத் திணைக்களத்தின் கிளையையும், பல்கலைக்கழகங்களின் பிரதி கிளைகளையும் அமைக்க வேண்டும். - என்றார்.

# சாதனையாளர் கௌரவிப்பு

வவுனியா, அல் இக்பால் மகாவித்தியாலயத்தில் சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது.

வித்தியாலயத்தின் அதிபர் எம்.எம்.அன்பஸ் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றிருந்தது. முன்னதாக அதிதிகள் பிரதான வீதியில் இருந்து பான்ட் அணிவகுப்புடன் மாலை அணிவித்து வரவழைக்கப்பட்டதுடன் பிரதான மண்டபத்தில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதன்போது, கடந்த 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் குறித்த பாடசாலையில் கல்வி கற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகிய மாணவர்கள், 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றி சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்கள் மற்றும் இணைப்பாட விதான செயற்பாடுகளில் மாகாணம், மாவட்டம், வலயம் ஆகிய மட்டங்களில் சாதனைகளை நிலைநிறுத்திய மாணவர்கள் என 77 பேர் கௌரவிக்கப்பட்டனர்.



அத்துடன், தெரிவு செய்யப்பட்ட மாணவத் தலைவர்களுக்கு அதிதிகளால் சின்னம் அணிவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது. தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் கலை நிகழ்வுகளும் இதன்போது இடம்பெற்றிருந்தன.

இந்நிகழ்வுகளில் வவுனியா மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்னமலர் சுரேந்திரன், வவுனியா தெற்கு வலய ஆசிரிய ஆலோசகர்கள், அயல் பாடசாலை அதிபர்கள், பள்ளித் தலைவர்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள், அப் பகுதி அபிவிருத்தி உத்தியோகத்தர், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(100)







### அட்டாளைச்சேனை கல்வியியற் கல்லூரியில்

# எலிக்காய்ச்சல் மற்றும் டெங்கு நோய் பாதுகாப்பு சிரமதானம்

(றமீஸ்)

நாட்டில் தற்போதைய காலகட்டத்தில் ஏற்பட்டு வரும் எலிக்காய்ச்சல் மற்றும் டெங்கு நோய் போன்றவற்றில் இருந்து பாதுகாப்பு பெறும் வகையில் அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரியில் விஷேட சிரமதான நிகழ்வு சனிக்கிழமை இடம்பெற்றது.

அட்டாளைச்சேனை சுகாதாரவைத்திய அதிகாரிகாரியாலய ஆலோசனை மற்றும் வழிகாட்டலின்கீழ், அட்டாளைச்சேனை பிரதேசசபையுடன்இணைந்துஇச்சிரமதான வேலைத் திட்டம் கல்லூரியின் பீடாதிபதி சட்டத்தரணி கே. புண்ணியமூர்த்திதலைமையில் இடம்பெற்றது.

இச்சிரமதான வேலைத் திட்டத்தில் உப பீடாதிபதி எம்.சி.ஜுனைட், கல்வியியற் கல்லூரியில் பயின்று வரும் பெருந் தொகையான ஆசிரிய பயிலுநர்கள், சுகாதாரத் துறையினர்,விரிவுரையாளர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது கல்வியியற் கல்லூரின் சுற்றுவட்டாரத்தில் உள்ள வடிகான்கள், கால்வாய்கள், நீரேந்து பிரதேசங்கள் போன்றன சுத்துப்படுத்துப்பட்டு டெங்கு நுளம்புகள் உண்டாகும் சூழலும், எலிகள் நடமாடும் இடங்கள் போன்றன சுத்தம் செய்யப்பட்டன.



இதேவேளை கல்லூரியை அண்டிய பிரதேசத்தில் பற்றைக் காடுகளாய்சுற்றாடலுக்கு கேடு விளைவிக்கத் தக்க வகையில் வளர்ந்து காணப்பட்ட மரம் செடி கொடிகள் புற்பூண்டுகள் போன்றன அழித்தொழிக்கப்பட்டு துப்புரவுப் பணி செய்யப்பட்டன.

இது தவிர டெங்கு நுளம்புகளின்தாக்கம்பற்றியும், எலிக்காய்ச்சலின் கேடுகள் தொடர்பிலும் விஷேட ஆலோசனைகள் இதன்போது சுகாதாரத் துறையினரால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## மனைவி, பிள்ளையின் முன் சமுர்த்தி அலுவலக உதவியாளர் சுட்டுக் கொலை

மீகொட - நாகஹவத்த பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

காரில் பயணித்த குறித்த நபரை இலக்கு வைத்து, சனிக்கிழமை இரவு அடையாளம் தெரியாத இருவரால் துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பத்தரமுல்ல செத்சிரிபாயவில் உள்ள சமுர்த்தி பிரதான காரியாலயத்தில் அலுவலக உதவியாளராக கடமையாற்றிய32வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையே துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சகோதரரின் வீட்டில் இருந்து மீகொட நாகஹவத்த பகுதியில் உள்ள தனது வீட்டிற்குச் சென்றுகொண்டிருந்த போதே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி பலத்த காயமடைந்த நபர் ஹோமாகம



வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிச் சூடு நடந்தபோது அவரது ஒன்றரை வயது மகள் மற்றும் அவரது மனைவி ஆகியோர் காரில் இருந்தனர் எனவும் இனந்தெரியாத நபர் ஒருவர் காரை இடைமறித்ததுடன் , மேலும் ஒருவர் துப்பாக்கிச் சூடு நடத்திவிட்ட தப்பியோடியுள்ளார் எனப் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலும் ,துப்பாக்கிச் சூடு நடத்தியவர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்பதுடன், மீகொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவித்துள்ளனர்.

## ஆதம்பாவா எம்.பியின் ஒழுங்கமைப்பில் நிந்தவூர் வைத்தியசாலையில் துப்புரவு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் தேசிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்திருந்த பாரிய சிரமதானப் பணி சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவா தலைமையில் தேசிய மக்கள் சக்தியின் நிந்தவூர் பிரதேச அமைப்பாளர் சம்சுன் அலி மற்றும் முக்கியஸ்தர்களான எம்.எம்.ஜவ்பர், எம்.பாரூக் உள்ளிட்ட கட்சியின் செயற்பாட்டாளர்களும் வைத்தியசாலை நிர்வாகத்தினரும் இணைந்து இந்த சிரமதானப்



பணிகளை மேற்கொண்டனர்.

இதன்போது வைத்தியசாலையின் சுற்றுச்சூழல் முற்றாக துப்புரவு செய்யப்பட்டு, கழிவுகள் அகற்றப்பட்டுள்ளன.

## பூச்சுக்கூட்டுக் கிராமத்திற்குச் செல்லும் வீதி உடைப்பெடுத்தமையால் போக்குவரத்து தடை

(எஸ் .சபேசன்)

வெல்லாவெளி பிரதேச செயலகப்பிரிவுக் குட்பட்ட ராணமடு 16 ஆம் கிராமத்தில் இருந்து பூச்சுக்கூட்டுக்கிராமத்திற்குச் செல்லும் வீதி உடைப்பெடுத்துள்ளமையால் அதனூடன போக்குவரத்து முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அதனை உடணடியாக செப்பனிட்டுத்தருதாறு அப்பிரதேச மக்களும் பிரயாணிகளும் கோரிக்கைவிடுத்துள்ளனர்.



அண்மையில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தால் மூங்கிலாறு பெருக்கெடுத்து வெள்ளக்காடாக மாறியதுடன் அவ்வீதியினூடாக வெள்ளம் மேவிச்சென்றமையால் இப்பெரும் உடைப்பு ஏற்பட்டுள்ளதுடன் இதுவரைக்கும் யாரும் திருத்துவதற்கான எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என பிரயாணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அதே வேளை அவ் வீதி உடைப்பெடுத்தமையால் பால்காய்ச்சின வட்டை வயல்பிரதேசம் உட்பட பல நெற்பயிர்களும் சேதமாகியுள்ளது.

எனவே அப்பிரதேச மக்களது நலனைக்கருத்தில் கொண்டு உடனடியாக அவ்வீதியைச் செப்பனிடுவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்கள்;.

## வவுனியா குளத்தின் ஆற்று பகுதியில் அரச ஊழியர் ஒருவரின் சடலம் மீட்பு



வவுனியா, சேமமடு குளத்தின் வான் பகுதியில் இருந்து அரச ஊழியர் ஒருவரின் சடலம் நேற்று (ஞாயிற்றுக் கிழமை) மீட்கப்பட்டுள்ளது.

குறித்த இளைஞர் வன ஜீவராசிகள் திணைக்களத்தால் அமைக்கப்பட்டுள்ள யானை வேலிகளை பராமரிக்கும் பணி செய்து வருகின்றார்.

இந்தநிலையில், சனிக்கிழமை மாலை குறித்த இளைஞர் சேமமடு குளத்தின் ஆற்றுப்பகுதிக்கு சென்றுள்ளார். இந்நிலையில்நீண்ட நேரமாகிய நிலையில் அவரை காணாத நண்பர்கள் தேடியுள்ளனர்.

அவரது சடலம் ஞாயிற்றுக்கிழமை காலை குறித்த ஆற்றுப் பகுதியில் இருந்து இளைஞர்களால் மீட்கப்பட்டது. சம்பவத்தில் மகாறம்பைக்குளம் பகுதியை சேர்ந்த நிரஞ்சன் என்ற அரசஊழியரே சடலமாக மீட்கப்பட்டவராவார். சம்பவம்தொடர்பாக ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (100)

# சபாநாயகரின் கலாநிதிப் பட்டச் சர்ச்சை பொய்சொன்னோரைத் தோலுரித்துள்ளது

## இம்ரான் எம்.பி. காட்டம்

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிண்ணியா சோலை வெட்டுவான் ,மயிலடைப்பஞ்சேனை மக்களுக்கு உலர் உணர்வுப் பொருட்களை நேற்று (ஞாயிற்றுக்கிழமை) வழங்கி வைத்தார்.

சுமார் 86 உலர் உணவுப் பொதிகளை நேற்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கி வைத்தார்.

இதில் கிண்ணியா நகர சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.எம்.மஹ்தி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த இம்ரான் எம்.பி. -

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் பொருளாதாரம் முற்றாக முடக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் கடத்தொழில் விவசாயம் வீட்டுத் தோட்டங்களை நம்பி வாழ்வாதாரத்தை மக்கள் ஈட்டிக் கொண்டிருப்பவர்கள். இந்த அரசாங்கம் பலத்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் மக்களில் மாற்றங்களை கொண்டு வருவார்கள் எனத் தெரிவு செய்த போதிலும் சீரற்ற கால நிலையால் பாதிக்கப்பட்ட மக்களைக் கூட கவனிக்கவில்லை.

எனவே தான் அரசாங்கத்திடம் கோரிக்கையாக முன்வைப்பது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களையும் நஷ்ட ஈடுகளை வழங்கவும். இந்த அரசாங்கம் பல மாற்றங்களை ஏற்படுத்துவார்கள் என்று நினைத்து மக்கள் வாக்களித்தார்கள். மக்களுக்கு வெறும் ஏமாற்றம் மாத்திரமே எஞ்சியுள்ளது. தேர்தல் காலங்களில் புதியவர்களை திறமையானவர்களை படித்தவர்களை தெரிவு செய்வோம் என கூறிய போதிலும் தற்போதைய சபாநாயகர் பதவி கலாநிதி பட்டம் தொடர்பில் அவர்களே நம்பிக்கையிழந்து மக்களை ஏமாற்றியுள்ளார்கள். இன்னும் எதை எதையெல்லாம் சொல்லி ஏமாற்றப்போகிறார்களோ இதனால் மக்கள் அதிருப்திக்கு உள்ளாகியுள்ளார்கள்.

இந்த வெள்ள அனர்த்தத்தில் மக்களுக்கு இந்த அரசாங்கம் உதவும் என்று எதிர்பார்த்த போதும் அது நடைபெறவில்லை.

இந்த அரசாங்கத்தின் செயற்பாடு மக்களுக்கு ஓர் ஏமாற்றத்தை அளித்துள்ளது.



நிவாரணங்களை பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க அரசாங்கம் உதவ வேண்டும். இந்த அரசாங்கத்தின் எதிரான செயற்பாடுகள் தீவிரமடைந்துள்ளன.

சபாநாயகர்பதவியில்ஏற்பட்டுள்ள அந்துப் பிரச்சினை இன்று பெரும் பிரச்சினையாக மாற்றப்பட்டுள்ளது.

குறிப்பாக சபாநாயகருடைய தகைமை சம்பந்தமான செயற்பாடுகள் இன்று அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தப் பெயர்களை நீக்குகின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

தேர்தல் காலங்களில் இந்த அரசாங்கம் படித்தவர்கள் வரவேண்டும், பட்டம்பெற்றவர்கள் வரவேண்டும், புதியவர்கள் வரவேண்டும் என்றெல்லாம் கூறினார்கள்.

சென்ற அமைச்சரவை வழங்குகின்ற போது முஸ்லிம்களுக்கு தகுதி இல்லை என்று பேசினார்கள். அதனால் வழங்கப்படவில்லை என்று கூறினார்கள். இன்று மக்கள் மத்தியில் என்ன சொல்லப் போகின்றார்கள்?

சபாநாயகர் பதவி என்பது கலாநிதி பட்டம் எடுத்தவர்களுக்கு வழங்குவதில்லை.

இன்னும் என்னென்ன விடயங்களில் இவர்கள் மக்களை ஏமாற்றி உள்ளார்கள் என்பதை அறிந்து கொள்ளலாம். - எனக் கூறினார்.

உங்களுடைய வேலை திட்டம் எல்லாம் துரிதப்படுத்தபட வேண்டும் 24 மணித்தியாலயங்களுக்குள்ளே மாற்றத்தை கொண்டு வருவேன் என்று சொன்னவர்கள் இன்று ஒன்றரை மாதங்கள் கழிந்தும் அவ்வாறு ஒன்றும் நடைபெறவில்லை உங்கள் செயற்பாடுகளை துரிதப்படுத்துங்கள் என அரசாங்கத்திடம் கோரிக்கை விடுப்பதாக தெரிவித்தார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.12.2024இல் வெளியிடப்பெற்றது